பக்கங்கள்: பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 07 வெள்ளிக்கிழமை (20.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:114

# அரசைக் குறை கூறிக்கொண்டு புலிகளை கண்டிப்பதில்லை - ஏன்?

## சர்வதேச சமூகம் மீது பிரதமர் ரட்ணசிறி சீற்றம்!



கொழும்பு, மார்ச் 20

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்துவரும் அப்பாவி மக்கள் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிச்சூடு நடத்துவதைக் கண்டிக்காத சர்வதேச சமூகமும் மனித உரிமை அமைப்புகளும், சிவிலியன்களின் பாதுகாப்புக் குறித்து அரசை மட்டும் அடிக்கடி குறை கூறுகின்றன என்றும் சிவிலியன்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் யுத்தம் செய்யுமாறு மீண்டும் மீண்டும் அரசுக்கு உத்தரவிடுகின்றன என்றும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற பாதுகாப்புப் படையினரின் மனைவிமார்களுக்கான (விதவைகள்) ஓய்வூதியச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் அப்போது மேலும் கூறியவை வருமாறு :-

படையினரின் அர்ப்பணிப்புக் காரணமாக பயங்கரவாதத்தை நாம் ஒழித்துக்கட்டிக்கொண்டு வருகின்றோம். அவர்களின்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமானப் பணிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் செஞ்சிலுவைக்குழுவுக்கு யூரோ மில்லியன் அவசர நிதி

பிரஸல்ஸ், மார்ச் 20

இலங்கையில் மோசமடையும் மனிதாபிமான நிலையை கருத்தில் கொண்டு அவசர உதவியாக மூன்று மில்லியன் யூரோவை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவுசெய்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை ஐரோப்பிய ஒன்றியம் நேற்று விடுத்துள்ளது.

மோதல் நடைபெறும் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்க இந்த உதவி அங்கு பணிபுரியும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு வழங்கப்படுகின்றது என்று ஒன்றியத்தின் ஆணையாளர் மைக்கல் தெரிவித்துள்ளார். (அ-1)

## விசாக் கட்டணங்களை உயர்த்துகிறது பிரிட்டன்

கொழும்பு, மார்ச் 20

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வெளியிலிருந்து பிரிட்டனுக்குள் வரும் மாணவர்கள் மற்றும் இதர குடியேறிகளிடம் இருந்து கூடுதல் விசா கட்டணத்தை பிரிட்டிஷ் குடிவரவுத்துறை வசூலிக்கவிருக்கிறது.

எழுபது டொலர்கள் என்ற இக்கூடுதல் கட்டணம் இந்த வருடத்திலேயே அமுலுக்கு வரும் என்று தெரிகிறது.

## நேற்றைய விமான, ஷெல் தாக்குதல்களில் பாதுகாப்பு வலயத்தில் 38 பேர் பலி; 90 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 20

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட ஷெல், பீரங்கித் தாக்குதல்களிலும் விமானத் தாக்குதல்களிலும் கொத்துக்குண்டுத் தாக்குதல்களிலுமாக நேற் றுக் கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட 38 பேர் பலியாகினர்; 90 பேர் படுகாயமடைந்தனர் - என்று இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அதிகாலை வேளையில் நடத்தப்பட்ட கொத்துக்குண்டுத் தாக்குதல்களால் மட்டும் 12 பேர் மரணமானார்கள் என்றும் இணையத்தளங்களில் தகவல்களில் சுட்டிக்காட்டப்பட்டது.

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான முள்ளிவாய்க்கால் மற்றும் வலைஞர்மடம் பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளையில் (14 ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளன் பகுதியை நோக்கி படைத்தரப்பினர் முன்நகர்வு

கொழும்பு, மார்ச் 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சிக்குண்டுள்ள பொதுமக்கள் பாது காப்பாக வெளியேறுவதற்கென அரசால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள புதுமாத்தளன் பாதுகாப்பு வலயத்தை நோக்கி இராணுவத்தின் மூன்று படையணிகள் தீவிர முன்னகர்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன எனப் படைத்தரப்பு நேற்றுத் தெரிவித்துள்ளது.

55, 58 மற்றும் 8ஆவது விசேட படையணியினரே இந்த தீவிர முன்னகர்வு (14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபையின் 26 ஆம் திகதிய கூட்டத்தில் ஆராயச் சீனா எதிர்ப்பு!

### அது வெறும் உள்நாட்டு விவகாரம் என்று வாதம்

நியூயோர்க், மார்ச் 20

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் எதிர்வரும் 26 ஆம் திகதிய கூட்டத்தில் இலங்கை விவகாரத்தை ஆராய்வதற்கான வாய்ப்புகள் உருவாகிய போதிலும் -

சீனா அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதால் அந்த வாய்ப்பு அனேகமாக அடிபட்டுப் போய்விட்டதாக நேற்றிரவு கிடைத்த பிந்திய தகவல்கள் தெரிவித்தன.




ஆஸ்திரியா, மெக்சிக்கோ, கொஸ்ரா - றிக்கா உட்பட பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்கள் அல்லாத பல நாடுகள் இலங்கை (14 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல்கள் உடன் நிறுத்தப்படாவிட்டால் பொதுமக்களின் உயிரிழப்பு அதிகரிக்கும்

### எல்லைகளற்ற மருத்துவர் குழு அபாயக் குரல்



கொழும்பு, மார்ச் 20

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் உடனடியாக நிறுத்தப்படா விட்டால், வட இலங்கையில் மேலும் பல பொதுமக்கள் உயிரிழக்கவும், காயமடையவும் நேரிடும் - என்று எம்.எஸ்.எவ். என்ற மருத்துவத் தொண்டர் அமைப்பு அபாயக்குரல் எழுப்பியுள்ளது.

''மோதல் பகுதிகளில் அகப்பட்டு அவதியுறும் சுமார் இரண்டு லட்சம் மக்களில் நிலைமை குறித்து வெளியுலகம் இன்னமும் பெருமளவுக்குத் தெரிந்து கொள்ளாமலேயே இருக்கிறது.'' என்று எல்லைகளற்ற மருத்துவர்கள் என்னும் பிரான்ஸை தலைமையகமாகக் கொண்ட எம்.எஸ்.எவ். அமைப்பின் (14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் நிலைமை கடந்த மாதத்தை விட மோசம்!

### புல்மோட்டையில் பணிகளை ஆரம்பித்த பின்னர் இந்தியா கவலை

கொழும்பு, மார்ச் 20

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் நிலைமை கடந்த மாதத்தைவிட மோசமடைந்துள்ளது எனப் புதுடில்லி கருதுகிறது என்று இந்தியாவின் செய்தி இணையத்தளமொன்று தெரிவித்துள்ளது.

புதுடில்லி இவ்வாறு கருதுவதற்கு புல்மோட்டையில் தமது பணிகளை ஆரம்பித்துள்ள மருத்துவர்களின் மதிப்பீடுகளும் (14 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைச் சிறுமியின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் சயனைட் அருந்தி மரணம்!

கொழும்பு, மார்ச் 20

திருகோணமலையில் ஜூட் ரெஜி வர்ஷா (வயது - 6 ) என்ற சிறுமியைக் கடத்தி, கப்பம் கோரி பின்னர் படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் நேற்று சயனைட் அருந்தி தற்கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனா எனப்படும் வரதராஜா ஜனார்த்தனன் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் என பொலிஸ்வட்டாரங்களிலிருந்து (14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவு

## மல்லாகம் நீதிமன்றம் விடுத்துள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 20

மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்கப் பகுதியில் விபத்துக்களைக் குறைப்பதற்காக போக்குவரத்து விதிகளை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு மல்லாகம் நீதிவான் எஸ்.பிரபாகரன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த மாதத்தில் அந்தப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து விபத்துக்களை குறைக்கும் நோக்குடன் விசேட விழிப்புணர்வுத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகனவரிப் பத்திரம் ஆகியன இன்றி வாகனம் செலுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வாகன விபத்துக்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கும்படி நீதிவான் பொலிசாருக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்கப் பிரதேசத்தில் இயங்கும் சுன்னாகம், தெல்லிப்பழை, இளவாலை, மானிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகளுக்கு இது தொடர்பான அறிவுறுத்தலை நீதிவான் விடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்துபொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக சுன்னாகம் பொலிஸ் பிரிவில் 29 பேரும் தெல்லிப்பழை பொலிஸ்பிரிவில் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப நபர்கள் மீதான வழக்குகளை விசாரித்த நீதிவான் அவர்களுக்கு அபராதம் விதித்தார்.

தொடர்ந்து இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நீதிவான் பொலிசாருக்கு உத்தரவிட்டார். (1)

# வெளியிணைப்பு இயந்திரம் மூலமான கடற்றொழிலுக்கு நான்குநாள் அனுமதி

வண்ணை, மார்ச் 20

வெளி இணைப்பு இயந்திரங்களில் கடற்றொழிலுக்கு மீனவர்களை அனுமதிப்பதில் கரையோரக் காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ள படையினர் புதிய ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி நான்கு நாள்கள் வெளியிணைப்பு இயந்திரம் மூலம் தொழில் செய்ய அனுமதிக்கப்படுவர்.

இதன் அடிப்படையில் வாரத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளைத் தவிர்ந்த ஏனைய நாள்களில் கடற்றொழிலுக்குச் செல்லும் வள்ளங்களில் வெளி இணைப்பு இயந்திரங்களைப் பூட்டி செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு வருகிறது.

ஞாயிறுக்கிழமைகளில் கடற்றொழிலுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. வெளி இணைப்பு இயந்திரங்களில் தொழிலுக்கு அனுமதிக்கும் நாள்களில் பெருந்தொகையான மீனவர்கள் சேர்வதால் சோதனை மேற்கொள்ளப்படும் பகுதியில் நெரிசலுக்கு உள்ளாகியே தொழிலுக்குச் செல்ல முடிவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (1-160)

# திருமலை மாணவி கொலையில் ரி.எம்.வி.பிக்குத் தொடர்பா?

## நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி சந்தேகம் எழுப்பியது

கொழும்பு, மார்ச் 20

திருகோணமலையில் முதலாம் வகுப்பு மாணவி ஒருத்தி கப்பம் கோரிக் கடத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) தொடர்புள்ளது எனப் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர திஸநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரை இடமாற்றம் செய்ய அரசு தீர்மானித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலையில் 6 வயது மாணவி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்திருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்புள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் இருந்துதான் அந்த மாணவியின் பாடசாலைப் புத்தகப் பை உள்ளிட்ட பொருள்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல், ஓட்டோ ஒன்றில் இரத்தமும் படிந்திருந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய கும்பலைச் சேர்ந்தவர்கள் கொலை, கொள்ளை, கடத்தல் மற்றும் கப்பம் கோரல் உள்ளிட்ட 30 குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரின் இந்த விசாரணையின்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தொடர்புபட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரை இடம்மாற்ற அரசு தீர்மானித்திருக்கிறது என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அப்படி ஏதும் தீர்மானங்கள் உண்டா என அரசு சொல்ல வேண்டும் - என்றார்.

இதற்குப் பதிலளித்த அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன, பொலிஸாரின் விசாரணையின் படி அரசு நடவடிக்கை எடுக்கும் - என்று உறுதியளித்தார். (அ-சி)

# உள்ளூராட்சி சபைகளின் ஊழியர்களுக்கு விசேட பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் பதவியணியினருக்கான பயிற்சி நெறிகள் ஏப்ரல் மாதத்தில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தப்படவுள்ளன.

வடமாகாண முகாமைத்துவப் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் கீழ் யாழ். மாநகர சபையினரால் இப் பயிற்சிகள் இரு கட்டங்களாக நடத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் வருமானம் சேகரித்தல் தொடர்பாக வருமானப்பரிசோதகர்கள்,வருமானமேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கான பயிற்சி நெறிகள் ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறும்.

அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கான அலுவலக ஒழுக்கம் தொடர்பான பயிற்சி நெறிகள் ஏப்ரல் 20 தொடக்கம் ஏப்ரல் 24ஆம் திகதி வரை இடம்பெறும்.

உத்தியோகத்தர்களுக்கு ஒரு நாளும் ஊழியர்களுக்கு நான்கு நாள்களுமாக பயிற்சி நடத்தப்படும்.

பயிற்சி நெறிகளில் பங்குபற்றும் உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் விவரங்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (1-207)

## கஞ்சா செடிகள் பாலாவியில் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 20

சட்ட விரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட கஞ்சாச் செடிகளை கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியதுடன் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

பாலாவி வடக்கில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட பொலிஸார் மிளகாய்க் கன்றுகளுடன் பயிரிடப்பட்ட பெருமளவு கஞ்சாச் செடிகளைக் கைப்பற்றினர்.

கஞ்சா உற்பத்தி செய்ததாக சந்தேகத்தில் கைது செய்த நபரை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை இரு வாரங்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1-207)

## முறைசாராக் கல்விப் பிரிவின் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் பேசியல் மணப்பெண் அலங்காரம், சிகை அலங்காரம், கேக் ஐசிங், பெயின்ரிங் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் பாடசாலை அதிபரையும், அழகுக்கலை ஆசிரியர் செல்வி குயின்ராவையும் சந்தித்து பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [illegible] ன என அறிவிக்கப்பட்டுள்ளது. (204)


## வேலையாள்கள் தேவை

1. தாதி / தாதி பயிலுனர்
2. வரவேற்பாளர் (கணனிதெரிந்தவராக)
3. சுகாதாரத் தொழிலாளி
4. மருந்தாளர்

இடம்:- யாழ்.வைத்தியசாலை

காலம்:- 21.03.2009 காலை 10 மணி

தொலைபேசி இல:- 222 3535


## யாழ்.ஸ்தாபனங்கள் போதகர்களின் ஐக்கியம் ஜப ஒன்று கூடல்

நாளை (21.03.2009) சனிக்கிழமை தேசத்தின் அமைதிக்கான ஐக்கிய உபவாச ஜெபம் கீழ் உள்ள இடங்களில் நடைபெறுவதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் - | எக்கள தொனி சபை (கச்சேரி) |
| வட்டுக்கோட்டை - | காணான் ஜெப ஆலயம் |
| உடுவில் | ஜீவ ஒளி மிசன் (சுன்னாகம்) |
| அச்சுவேலி - | கிறிஸ்தவ மிசனறி சபை |
| தீவு - | அப்போஸ்தல சபை |

யாழ்.ஐக்கிய நிர்வாகம்

## குடும்ப உறவுப் பூஜையும் பஜனையும்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். கச்சேரி ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீகல்கி ஆன்மீக மையத்தில் குடும்ப உறவுப் பூஜையும், பஜனையும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை சனிக்கிழமை பி.ப. 3.30மணிக்கு நடைபெறும். (204)

## திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் இன்று முதல் சட்டத்துறை மாணவர்களுக்கான மட்டம் 3க்கான இறுதிப்பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

இந்தப்பரீட்சையில் தோற்றும் மாணவர்களை சமுகமளிக்குமாறு நிலைய இணைப்பாளர் சி.கந்தவேள் கேட்டுள்ளார். (1)

## பருத்தித்துறை வந்து சேர்ந்த 600 பேர் கைதடியில் தங்கவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

முல்லைத்தீவிலிருந்து படகு மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த சுமார் 700 பேர் நேற்று முன்தினம் புதன்கிழமை அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைதடி ஆயுள் வேத மாணவர் விடுதி மற்றும் கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் ஆகியவற்றில் இயங்கும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (1-207)

## நல்லூர் கோட்ட ஆசிரியர்கள் செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

நல்லூர் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 1 ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த விசேட கல்விச் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த செயலமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை -

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 1, தரம் 2 ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (1)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அழகேந்திரம் பூரணம்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகேந்திரம் பூரணம் நேற்று (19.03.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகேந்திரத்தின் அன்பு மனைவியும் ஸ்ரீரங்கநாதனின் (யூறோவில்) அன்புத் தாயாரும் தேவி மனோகரியின் அன்பு மாமியும் சாருலதா, லக்ஸ்மன், துவாரகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில்.

தகவல்: ஸ்ரீரங்கநாதன் (மகன்).

## திருமதி மரியஸ்ரெலா சிறில்

(இளைப்பாறிய ஆசிரியை, நாரந்தனை றோ.க.ம.வி.)



நாரந்தனை மேற்கைச் சேர்ந்தவரும் 42/1, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் வசித்தவருமான திருமதி மரியஸ்ரெலா சிறில் நேற்று (19.03.2009) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் றே.வ.சிறிலின் அன்பு மனைவியும் அன்ரன் ஜெயராஜின் அருமைத் தாயாரும் கீதாஞ்சலியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - ரெட்ணம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அன்ரனிப்பிள்ளை, வீனஸ், இராசேந்திரம், புஸ்பம், ஜேட்றூட், காலஞ்சென்ற மேரியசிந்தா, பேணாட் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/1, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: றே.வ.சிறில் (கணவர்), சி.அன்ரன் ஜெயராஜ் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பழி ஓரிடம், பாவம் வேறிடத்தில்!

கடன் வாங்கிக் கல்யாணம் செய்யாதே என்பது அர்த்தமுள்ள பழமொழி. பிள்ளைகளின் திருமணத்தை குறிப்பிட்ட காலத்திலே செய்து வைக்கவேண்டும் என்ற தேவையும் அவசியமும், அதேவேளை, போதிய பணமில்லாத நிலையிலும், பெற்றோர்கள் பலரும் கடன் வாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவது உண்டு. பணவசதி வரும்வரை திருமணத்தைத் தள்ளிப்போடுவதால் விளையக்கூடிய பாதிப்புகளுடன் ஒப்பிடும்போது, கடன்வாங்குவது பரவாயில்லை என்று எண்ணி நடத்தப்படும் கல்யாணங்களும் உண்டு. ஒரு வகையில் அது ஜீரணிக்கப்படக் கூடியது என்று கொண்டாலும், உரிய தவணையில் - கடன் வழங்கி உதவியவருக்குத் தேவைப்படும்போது - அதனை மீளச் செலுத்த முடியாத நிலை உருவாகும்போது ஏற்படக்கூடிய மன உளைச்சலும் கௌரவக்கேடும் கடன்பெற்று கல்யாணம் செய்யாதிருந்தால் இந்த வேதனை வந்திருக்காதே என்று கழிவிரக்கம் கொள்ள வைப்பதும் உண்டு.

ஆனால், பிள்ளைகளின் திருமணத்தை அடக்கமாக, ஆடம்பரமின்றி, மிகுந்த பொருள் செலவின்றி, நடத்த விருப்பமின்றி கடன் வாங்கிக் கல்யாணம் செய்து வைக்கும் பெற்றோர், கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் அல்லாடும்போதும் அதனால் அடிதடிகள் ஏற்பட்டு அவமானப்படும்போதும், குடும்ப கௌரவம் கெடுகிறதே என்று கழிவிரக்கம்கொள்ளும்போதும் ''நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாமா'', என்று நிலைக்குத்தள் எப்படுகின்றனர்.

இவை தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையில் இரண்டு வகையானவை; இரண்டு நிலைகள் உடையவை. ஆனால், ஸ்ரீலங்கா நாட்டின் அரசு கடன்வாங்கி நிர்வாகத்தை நடத்துவதும், அதனை படுகுழியில் தள்ளுவதும் பொதுமக்கள் மீது கடன்சுமையை பல தலைமுறையினரின் தலைகள் மீது சம்பல் அரைத்துவிடும் செயலை எந்த வகையென்று வகுக்கமுடியவில்லையே...!

வரலாற்றில் என்றுமில்லாதவாறு, இந்த நாடு மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியில், பயங்கரமான நிலையில் சிக்குண்டுள்ளதாக ஏற்கனவே ஒரு பேரிடி வீழ்ந்திருக்கிறது. அதிலிருந்து தப்புவது அல்லது எதிர்நீச்சல் அடிப்பது எவ்வாறு என்பது புரியாமல் நாட்டு நலனில் அக்கறையுள்ளவர்களும், பொருளியல் உணர்வுகொண்டவர்களும் ஏக்கம்கொண்டிருக்கின்றனர்.

நாட்டை இயங்கச்செய்வதற்கு - அது படுகுழியில் விழுந்து மக்கள் அவதிப்படாமல் தடுப்பதற்கு - 40 ஆயிரம் கோடி ரூபா கடன்பெறவேண்டிய தேவை உண்டு என்ற அதிர்ச்சித் தகவல் வெளியானது. அது குறித்து கடந்தவாரம் இப் பத்தியில் ஆராய்ந்திருந்தோம்.

அதற்கு மேலதிகமாக, இல்லை ஓர் அங்கமாக, இப்போது மற்றொரு அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து ஆட்சி நடத்திய, நிர்வாகம் செய்த, நான்கு வருடங்களில் அரசு 2 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாவைக் கடன் வாங்கியிருக்கிறது என்பதே இரண்டாவது அதிர்ச்சியாகும்.

இத்தனைக்கும் இந்த நாடு சுதந்திரம் அடைந்த 1948 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான 55 வருட காலத்தில் வெளிநாடுகளிடமிருந்தும் சர்வதேச நிதி நிறுவனங்களில் இருந்தும் பெறப்பட்ட மொத்தக் கடன்தொகை ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 30 கோடி ரூபாவாகும்.

இந்தக் கணக்கை - ஒப்பீட்டளவிலான கணக்கை - அதிகரித்த கடன் விவரத்தை நாடாளுமன்றத்தில் உரிய சான்றுகள், ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியிருக்கிறார் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க.

உண்மையான நாட்டுப்பற்றும், அதன் வளர்ச்சியில் அக்கறையும் கொண்ட பிரசைகள் கற்பனையும் செய்து பார்க்க முடியாத அளவுக்கு, கடந்த 4 வருடங்களில் வகை,தொகை, எல்லையற்றமுறையில் கடன்பெறப்பட்டுள்ளது. அதன் விளைவாக ஒவ்வொரு பிரசையின் தலையின் மீதும் கடன்பளு என்ற பாறாங்கல்லைத் தூக்கிப்போட்டிருக்கிறது அரசு.

ஆட்சியில் இருப்பவர்களுக்கு அது குறித்துக் கவலையும் அக்கறையும் எங்கே உண்டாகப் போகின்றது?

பதவிக்காலம் பூர்த்தியானதும் பாயைச் சுருட்டிக்கொண்டு வீட்டுக்கு நடையைக் கட்டினால் எவருக்கும் பதில் கூறவேண்டிய தேவை ஆட்சியாளருக்கு இல்லை. வாங்கிய கடனைத் '' திருப்பித் தா'' என்று கழுத்தில் பிடித்துக் கேட்கவும் எவராலும் முடியாது.

நாம் என்ன செய்வது? நாட்டு நிர்வாகத்தையும், மக்கள் இயங்கு நிலையையும் பேணுவதற்குக் கடன்பெற வேண்டியதாயிற்று என்று கூறி ஆட்சியில் உள்ளவர்கள் தப்பித்துக்கொண்டு விடுவார்கள்!

நாட்டையும் மக்களையும் கடன்காரர்களாக்கக் கூடாது என்ற தூர நோக்குடன், உகந்த பொருளாதார அடித்தளத்தைப் போட்டிருந்தால் இந்த நிலைமையை ஓரளவிலேனும் தவிர்த்திருக்கலாம்; பளுவைக் குறைத்திருக்கலாம்.

இன்றைய படுபாதகமான பொருளாதார நிலைமை தவிர்க்கப் படவேண்டும் என்று தூரதிருஷ்டியுடன் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்திருக்க அரசுக்கு வக்கில்லாமல் போனதா?

ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டுவதுபோன்று நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித்தந்த துறைகளான தேயிலை உற்பத்தி, சுற்றுலாத்துறை, ஆடை உற்பத்தித்துறை என்பன முடங்கிப் போயுள்ளன.

இதற்குக் காரணம், அரசாங்கத்தின் செயற்பாடுகளே என்பதில் சந்தேகம் இல்லை.

உலகப்பொருளாதார நெருக்கடியை முழுக்காரணமாக முன்நிறுத்தி, அதிக கடன் பெற்ற பொறுப்பிலிருந்து அரசாங்கம் நழுவி விடமுடியாது. மனித உரிமைகளைப் பேணுதல், இனப்பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது மற்றும் பல விவகாரங்களில் அரசு கடைப்பிடித்துவரும் தூரநோக்கற்ற கொள்கைகளே இந்த நிலைக்குப் பிரதான காரணிகள் எனலாம்.

நாட்டு நலனில் காட்டும் அக்கறையை விட, ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்கு ஏற்ற கொள்கைகளும், திட்டங்களும் அவற்றின் நடைமுறைப்படுத்தல்களுமே கடன்படு நிலைக்கு பிரதான சூத்திரம்.

இலங்கையின் ஏற்றுமதி வீழ்ச்சியால் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய அந்நியச் செலாவணி 25 சதவீதம் வீழ்ச்சி அடைந்திருப்பதையும் கருணாநாயக்க சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அதேபோன்று நாட்டில் இயங்கி நிதி உதவிகளை வழங்கிவந்த பல நிதி நிறுவனங்களை அவை ஏகாதிபத்தியத்தின் சின்னங்கள் என்றும் வேறுபல இல்லாத பொல்லாத காரணங்களையும் சோடித்து வெளியே அனுப்பியதும் அதிக கடன் பளுவுக்கான காரணங்களில் ஒன்று.

மொத்தத்தில், நாட்டின் வரவு-செலவுத் துறையில் வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கட்டவேண்டும் என்ற சிந்தனையே இன்றி அரசினால் கடந்த 4 வருடங்களாக நடத்தப்பட்ட நிர்வாகத் திறமையின்மை, மற்றும் பொறுப்பற்ற தன்மை மக்கள் தலைகளில் பாறாங்கற்களைத் தூக்கி வைத்திருக்கிறது. பாவம் சாதாரண ஸ்ரீமான் பொதுசனம், சந்ததி சந்ததியாகக் கடன் பளுவோடு வாழ்ந்து பொருளாதாரப் பற்றாக்குறை என்ற தண்ணீருள் மூழ்கவேண்டியதுதான். மொத்தத்தில் பழி ஓரிடம். பாவம் வேறிடம் என்ற வேதனையே மிஞ்சுகின்றது.

# உருளைக் கிழங்கு, பம்பாய் வெங்காயத்தை ஒரு மாதத்திற்கு எடுத்துவருவதைத் தவிர்க்கவும்

## வர்த்தகர்களிடம் யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

யாழ்.மாவட்டத்தில் இம்முறை விவசாயிகளினால் உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் என்பன பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு வசதியாக உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் ஆகியவற்றை ஒரு மாதத்துக்கு கொழும்பிலிருந்து எடுத்து வருவதைத் தவிர்க்குமாறு யாழ்.வணிகர் கழகம் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

'நிஷா' புயல் அனர்த்தத்துக்குப் பின்னர் யாழ்ப்பாண விவசாயிகளால் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் என்பன அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளன. தற்போது அவை அறுவடைப் பருவத்தை நெருங்கி விட்டன. சில இடங்களில் இவை அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு வரத் தொடங்கிவிட்டன.

இந் நிலையில் இந்த உற்பத்திப் பொருள்கள் தனியார் வர்த்தகர்களால் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்படுகின்றன. இதனால் உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் என்பவற்றைப் பயிரிட்ட விவசாயிகள் அவற்றைச் சந்தைப்படுத்துவதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். கொழும்பிலிருந்து இவை எடுத்து வரப்படுவதனால் அவற்றின் விலைகளும் வீழ்ச்சி கண்டுள்ளன.

எனவே உள்ளூர் விவசாயிகளுக்கு உதவும் வகையில் அவர்கள் தமது உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் ஆகியவற்றைச் சந்தைப்படுத்துவதற்கு வசதியாக ஒரு மாத காலத் துக்குத் தனியார் வர்த்தகர்கள் அவற் றைக் கொழும்பிலிருந்து எடுத்து வருவ தைத் தவிர்க்குமாறு யாழ்.வகர் கழகம் வினயமாகக் கேட்டுள்ளது. (50)

# திருமலை, வவுனியா, பதவியா வைத்தியசாலைகளில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு சேவையில்

கொழும்பு, மார்ச் 20

விடுவிக்கப்படாத பிரதேசங்களிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி வருகை தரும் மக்களுக்குச் சுகாதார வசதிகளை வழங்க அமைக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவப் பிரிவு 24 மணித்தியாலங்களும் இயங்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பணிகளை சிறப்பாக ஒருங்கிணைக்கும் நோக்கில் வவுனியா, திருகோணமலை மற்றும் பதவியா ஆகிய பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலை ஒவ்வொன்றுக்கும் தலா 3 வைத்தியர்கள் வீதம் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் டாக்டர் அஜித்மெண்டிஸ் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்:-

கடந்த மாதம் 11 ஆம் திகதி முதல் இம்மாதம் 14 ஆம் திகதி வரை திருகோணமலை வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 651 ஆகும். இக் காலப் பகுதியில் 26 குழந்தைகள் பிறந்துள்ளதோடு ஆயிரத்து 557 பேருக்கு சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிக சிகிச்சைக் களுக்காக சுமார் 3 ஆயிரம் பேர் கொழும்பு, கண்டி, வவுனியா, மன்னார் மற்றும் பொலனறுவை ஆகிய வைத்தியசாலைகளுக்கு மாற்றபட்டுள்ளனர்.

வவுனியாவிலுள்ள 12 நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 33 ஆயிரத்து 840 பேரின் சுகாதார விடயங்களைக் கவனிப்பதற்காக சத்திரசிகிச்சை நிபுணர்கள்68பேரும், மயக்க மருந்து நிபுணர்கள் ஐந்து பேரும், குடும்பசுகாதாரசேவை உத்தியோகத்தர்கள் 20 பேரும், தாதிமார்கள்116பேரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர ஒவ்வொரு நலன்புரி முகாம்களுக்கும் ஓர் அம்புலன்ஸ் வண்டி வீதம் வழங்கப்பட்டுள்ளன. வவுனியா, செட்டிகுளம் மற்றும் பூவரசன்குளம் ஆகிய பிரதேசங்களி லுள்ள வைத்தியசாலைகளுக்கு 7அம்புலன்ஸ் வண்டிகளும் புல்மோட்டையிலுள்ள நடமாடும் வைத்தியசாலைக்கு 20 அம்புலன்ஸ் வண்டிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தாக வும் அவர் மேலும் குறிப்பிட்டார். (50)

# ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் இதழியல் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் இதழியல் கற்கை நெறிக்கு ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தியெய்திப் பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

இது ஒரு வருடகால முழு நேரக் கற்கை நெறியாகும். முதலாவது அணி மாணவர்கள் இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர். இரண்டாவது அணி மாணவர்கள் இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறவுள்ளனர்.

மூன்றாவது அணி மாணவர்களின் நலன் கருதி இந்தக் கற்கை நெறிக்கான மொத்தக் கட்டணம் 22ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 12 ஆயிரத்து 750 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இன்று சர்வதேச ரீதியாக ஊடகக்கற்கை பல மட்டங்களில் வளர்ச்சி பெற்று பல்கலைக்கழக தொழில் நுட்பக் கல்வியை விரும்பும் மாணவர்களின் முன்னணி விருப்பப் பாடங்களில் ஒன்றாக திகழ்கின்றது. ஊடகத்துறையில் பலவகையான தொழில் வாய்ப்புகள் ஏற்பட்டு வருவதையும் காண முடிகின்றது. இத்துறை சார்ந்தவர்கள் நல்ல உழைப்புடன் ஊதியத்தைப் பெறுவதுடன், இவர்கள் அரசியல், சமூக, பொருளாதாரம், கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற பல்துறைகளின் வளர்ச்சிக்கு ஊடகங்கள் மூலமாக பெரும் பணி செய்து வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையமும் தரும் சந்தர்ப்பத்தை யாழ்ப்பாண மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என இயக்குநர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார். (50)

# இரு வார காலப் பகுதியில் முல்லைத்தீவுக்கு 1,000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தகவல்

கொழும்பு,மார்ச் 20

கடந்த இருவார காலத்தில் 1,000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் முல்லைத்தீவில் விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு ஆணையாளர் மேலும் கூறியதாவது:-

இந்த 1000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் இரு கட்டங்களாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. முல்லைத்தீவில் துறைமுகம் இல்லாத காரணத்தால் கப்பல் கடலில் நங்கூரமிடப்பட்டு சிறு படகுகள் மூலமே பொருள்கள் தரையிறக்கப்பட்டன. பின்னர் இக்கப்பல் மூலம் முல்லைத்தீவில் சிக்கியிருந்த நோயாளிகள் திருகோணமலைத் துறைமுகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இவ்வாறு கடந்த பெப்ரவரி மாதம் முதல் இம் மாதம் 16 ஆம் திகதி வரையில் 4116 நோயாளிகள் திருகோணலைக்கு கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

புலிகளால் அச்சுறுத்தல் இருந்த போதும் ஒரு மாதத்துக்கு மூன்று முறை இக் கப்பல் மூலம் முல்லைத்தீவுக்கு உணவுப் பொருள்கள் ஏற்றிச் செல்லும் நடவடிக்கை பல கஷ்டங்களுக்கும் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (50)

# பால்மா வகைகள் போதியளவு இல்லாமையால் வன்னிப் பகுதியில் சிறுவர்கள் பெரும் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 20

இடம்பெயர்ந்து இலட்சக்கணக்கான மக்கள் வதியும் வன்னிப்பகுதியில் பால்மா வகைகள் போதியளவு இல்லாமையால் சிறுவர்கள்,குழந்தைகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்த நிலையில் மிகவும் நலிவுற்றிருக்கும் குழந்தைகளும் போசாக் கின்மைக் குறைபாட்டை எதிர்கொண்டுள்ளனர். இந் நிலையில் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் பால்மா வகைகள் அவசியமாகத் தேவைப்படுகின்றமை கண்டறியப்பட்ட நிலையிலும் இப் பகுதிகளுக்கு பால்மா வகைகள் மாதக்கணக்காக அனுப்பப் படவில்லை- என்று கூறப்படுகின்றது.


இவ்விடயம் குறித்து சர்வ தேச உதவி நிறுவனங்களும் சிறுவர் நலன்பேணும் அமைப்புகளும் உரிய கவனமெடுத்து செயல்படாமை குறித்து பாதிக்கப்பட்ட சிறுவர்,குழந்தைகளின் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். இந்நிலை தொடர்ந்தும் நீடித்தால் பல குழந்தைகளும் சிறுவர்களும் நிரந்தர போசாக்குக்குறைபாட்டை எதிர் கொள்ளும் அபாயம் உள்ளது என்றும் பெற்றோர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

## நாளை

பங்குனி 08 21.03.2009
சனிக்கிழமை
திதி: தசமி
மாலை 5.46வரை
நட்சத்திரம்: உத்தராடம்
[illegible] 11.38 வரை
[illegible]: 03.17 - 04.47
ராகுகாலம்: 09.17 - 10.47ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸில் இந்தியா 278/4



அபாரமாக ஆடி அரைச் சதம் கடந்த இந்திய அணி வீரர்கள் சச்சின், டிராவிட், கம்பீர்...

ஹாமில்டன், மார்ச் 20

ஹாமில்டனில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தியா - நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டி நடந்துவருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 78.2 ஓவர்களின் முடிவில் 279 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அடுத்து முதல் இன்னிங்ஸை ஆடிய இந்திய அணிக்கு, ஷேவாக், கம்பீர் ஆகியோர் அதிரடி தொடக்கம் தந்தனர். ஒரு நாள் போட்டிகளைப் போல ஆடிய ஷேவாக், மில்ஸ் வீசிய பந்தில் ஆட்டத்தின் 4ஆவது ஓவரில் 3 பவுண்டரிகளை அடித்து அசத்தினார்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஷேவாக் (22), கம்பீர் (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணியின் கௌதம் கம்பீர், டிராவிட், சச்சின் டெண்டுல்கர் ஆகியோரின் அபார அரைச்சதத்தால் இந்திய அணி 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 278 ஓட்டங்களை எடுத்தது.

நேற்றைய 2ஆம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 37ஆக இருந்தபோது ஷேவாக் ரன்-அவுட் முறையில் (24 ஓட்டங்கள்) ஆட்ட மிழந்தார்.

இதையடுத்து டிராவிட் களம் இறங்கினார். அவர் அபாரமாக விளையாடி அரைச் சதம் கடந்தார். மறுமுனையில் திறமையாக ஆடிக்கொண்டிருந்த கம்பீர் 72 ஓட்டங்களுடன் மாட்டினின் பந்துவீச்சில் மக்கலத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான சச்சினும் அபாரமாக ஆடினார். மறுமுனையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்த டிராவிட் 66 ஓட்டங்களுடன் ஓ பிரைனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இவரைத் தொடர்ந்து லக்ஷ்மன் களமிறங்கினார். சச்சினுடன் ஜோடி சேர்ந்த இவர் 30 ஓட்டங்ளுடன் மாட்டினின் பந்துவீச்சில் ரெய்லரிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்து யுவராஜ் களமிறங்கினார்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் இந்தியஅணி 4 விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களை எடுத்தது. சச்சின் 70 ஓட்டங்களுடனும், யுவராஜ்சிங் 8 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

## டெஸ்ட் போட்டியில் அதிக பிடியெடுப்பு; சாதனையைச் சமர் செய்தார் டிராவிட்!

டெஸ்டில் அதிக பந்துகளைப் பிடியெடுத்து அவுஸ்திரேலிய முன்னாள் ஆரம்ப ஆட்டக்காரர் மார்க் வோவின் சாதனையை, இந்திய அணியின் சுவர் என்று அழைக்கப்படும் ராகுல் டிராவிட் நேற்றுமுன்தினம் சமன் செய்தார்.

ஹாமில்டன் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து ஆரம்ப ஆட்டக்காரர் மார்ட்டின் குப்டில், சகீர்கான் பந்து வீச்சில் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். டெஸ்டில் டிராவிட்டின் 181ஆவது பிடியெடுப்பு இது வாகும். இதன் மூலம் டெஸ்ட் போட்டியில் அதிக பந்துகளைப் பிடியெடுத்த மார்க் வோவின் சாதனையை டிராவிட் சமன் செய்தார். 2002ஆம் ஆண்டு சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற மார்க் வோ 128 டெஸ்டில் விளையாடி 181 பந்துகளைப் பிடியெடுத்திருக்கிறார். அதேசமயம் டிராவிட் தனது 132ஆவது டெஸ்டில் இந்த இலக்கை எட்டியிருக்கிறார்.

டெஸ்டில்அதிக பந்துகளைப் பிடியெடுத்த முதல் 5 வீரர்கள் வருமாறு:-

இந்திய வீரர் டிராவிட் 132 டெஸ்ட் போட்டிளில் விளையாடி 181 பந்துகளைப் பிடியெடுத்திருக்கிறார்.

அவுஸ்திரேலிய வீரர் மார்க் வோ 128 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 181 பந்துகளைப் பிடியெடுத்திருக்கிறார்.

நியூஸிலாந்து வீரர் பிளமிங் 111 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 171 பந்துகளைப் பிடியெடுத்திருக்கிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லாரா 111 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 164 பந்துகளைப் பிடியெடுத்திருக்கிறார்.

அவுஸ்திரேலிய வீரர் மார்க் ரெய்லர் 104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 157 பந்துகளைப் பிடியெடுத்திருக்கிறார்.

**விளையாட்டு அரங்குகளில்**

## மேற்கிந்திய மைதானத்தில் போட்டிகளை நடத்த ஓராண்டுத் தடை

மேற்கிந்திய தீவுகளின் அண்டிகுவாவில் புதிதாக உருவாக்கப்பட்ட சர் விவியன் ரிச்சர்ட்ஸ் விளையாட்டு மைதானத்தில் ஓராண்டு காலத்துக்கு எந்தவித சர்வதேச கிரிக்கெட் போட்டிகளையும் நடத்துவதற்கு ஐ.சி.சி. தடை விதித்துள்ளது.

சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டி மோசமான மைதான நிலைமைகள் காரணமாக 10 பந்துகள் மட்டுமே வீசப்பட்ட நிலையில் கைவிடப்பட்டதால் இந்தத் தடை உத்தரவை ஐ.சி.சி. பிறப்பித்துள்ளது.

மைதானங்களை சரியாகப் பராமரிக்குமாறு மேற்கிந்திய கிரிக்கெட் சபைக்கும் ஐ.சி.சி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

''சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு ஏற்றவாறு தரமான ஆடுகளத்தையும், மைதானத்தையும் பராமரிப்பது அந்தந்த நாட்டு கிரிக்கெட் சபையின் பொறுப்பு'' - என்று ஐ.சி.சி. பொது மேலாளர் டேவ் ரிச்சர்ட்சன் தெரிவித்துள்ளார்.

## ஆஸி. - தென்னாபிரிக்கா மூன்றாவது டெஸ்ட் ஆரம்பம்

கேப்டவுன், மார்ச் 20

தென்னாபிரிக்கா சென்றுள்ள பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி மூன்று டெஸ்ட், இரண்டு ருவென்ரி 20 மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் இரண்டு டெஸ்டில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் தொடரை வென்று முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான கடைசி டெஸ்ட் கேப் டவுனில் நேற்றுத் தொடங்கியது. சொந்த மண்ணில் ஆறுதல் வெற்றிபெற தென்னாபிரிக்கா தீவிர பயிற்சி மேற்கொண்டு வந்தது. டெஸ்ட் தொடரை 3-0 என கைப்பற்றி அசத்த அவுஸ்திரேலிய அணி போராடும் என்பதால் போட்டியின் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.

## காலிறுதியில் சபீனா, இவனோவிச்

புதுடில்லி, மார்ச் 20

இந்தியன் வெல்ஸ் சர்வதேச டென்னிஸ் தொடர் 4ஆவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை ஜில் கிரேபஸை 7-5, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு நுழைந்த ரஷ்ய வீராங்கனை தினாரா சபீனா மகளிர் ஒற்றையர் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிப்பதற்கு அருகில் வந்துள்ளார்.



காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறிய சபீனா, இவனோவிச்

மற்றொரு ஆட்டத்தில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்கா தரவரிசையில் இல்லாத இஸ்ரேல் வீராங்கனை ஷாஹர் பியரை 7-5, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். நான்காவது சுற்றில் சேர்பியாவின் இவனோவிச் இத்தாலியின் பிளவியா பென்னட்டாவை வென்று காலிறுத்திச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு ரஷ்ய வீராங்கனை வெராஸ் வொனரேவா சீனாவின் வளரும் நட்சத்திரமான லி நா என்பவரை 6-4, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். 9ஆம் தரவரிசை வழங்கப்பட்ட டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாகி போலந்து வீராங்கனை ராத்வான்ஸ்காவை 7-5, 6-3 என்ற செற் கணக்கில் வீழ்த்தி காலிறுதியில் ஸ்வொனரேவாவை சந்திக்கிறார். தினாரா சபீனா காலிறுதியில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்காவை சந்திக்கிறார்.

## ஐ.பி.எல். போட்டிகளுக்கான பாதுகாப்புக் குறித்து மாநிலங்களுடன் ஆலோசித்து விரைவில் இறுதி முடிவு

DLF INDIAN PREMIER LEAGUE

புதுடில்லி, மார்ச் 20

இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) கிரிக்கெட் போட்டிக்கான பாதுகாப்புக் குறித்து மாநிலங்களுடன் கலந்தாலோசித்து விரைவில் இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். கோடிக்கணக்கான பரிசுத்தொகையைக் கொண்ட 2ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டியை, ஏப்ரல் 10 முதல் மே 24ஆம் திகதி வரை நடத்த ஐ.பி.எல். குழு திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில் லாகூரில் இலங்கை வீரர்கள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் காரணமாக ஐ.பி.எல். தொடருக்கு பாதுகாப்பை அதிகரிக்க வேண்டுமென மத்திய அரசை ஐ.பி.எல். கேட்டுக்கொண்டது. அதேசமயம் போட்டி நடைபெறும் கால கட்டத்தில் பொதுத் தேர்தலும் நடைபெறவுள்ளதால், பாதுகாப்புக் குறித்து மத்திய அமைச்சகம் கவலை தெரிவித்தது.

இதனால் ஐ.பி.எல். குழுவிடம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அட்டவணையை மாற்றியமைக்குமாறு உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டது. இரண்டு முறை அட்டவணை மாற்றப்பட்ட பின்னரும் உள்துறை அமைச்சகம் பச்சைக்கொடி காட்டவில்லை. மாநில அரசுகளின் ஆலோசனையைக் கருத்தில் கொள்ளாமல் அட்டவணையில் மாற்றம் செய்துள்ளதாக ஐ.பி.எல். குழு மீது அமைச்சகம் குற்றஞ்சாட்டியது.

இந்நிலையில் அட்டவணையில் 3ஆவது முறையாக மாற்றம் செய்யப்பட்டு உள்துறை அமைச்சகத்தின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது ஐ.பி.எல். நிர்வாகம்.

இதுதொடர்பாக டில்லியில் கடந்த புதன் கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சிதம்பரம்,

ஐ.பி.எல்லிடமிருந்து 3ஆவது முறையாக மாற்றியமைக்கப்பட்ட அட்டவணையை செவ்வாய்க்கிழமை காலை பெற்றுள்ளோம். அதை, தொடர்புடைய மாநிலங்களின் பார்வைக்கு அனுப்பியுள்ளோம். அவர்களிடம் கருத்துகள் கேட்டுள்ளோம். குறிப்பாக, பாதுகாப்பு ஏற்பாடு குறித்து விரிவாகக் கேட்டுள்ளோம். அவர்களின் முடிவுகள் வந்ததும் ஆய்வு செய்து இறுதி முடிவு மேற்கொள்ளவுள்ளோம் - என்றார்.

போட்டி தொடங்குவதற்கு ஒருமாதத்துக்கும் குறைவாகவே உள்ள நிலையில், போட்டியை நடத்திக் காட்டுவதில் ஐ.பி.எல். நிர்வாகிகள் நம்பிக்கையுடன் உள்ளனர். அதேசமயம் உள்துறை அமைச்சகம் அனுமதி தருமா என்ற கவலையும் அவர்களை வாட்டிவதைக்கிறது. ஒருவேளை போதுமான பாதுகாப்பு அளிக்க வாய்ப்பில்லை என மத்திய அரசு தெரிவிக்குமேயானால், போட்டி ஒத்திவைக்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. அப்படியானால் இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டிகளை நடத்துவதில் சந்தேகம் எழுந்துள்ளது. ஏனெனில் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள், தங்களது நாட்டுக்காக பல்வேறு தொடர்களில் அடுத்தடுத்து விளையாடவுள்ளனர். மொத்தத்தில் ஐ.பி.எல். நிர்வாகிகள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

மூன்றாவது முறையாக கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் பல்வேறு மாற்றங்களைச் செய்துள்ளது ஐ.பி.எல். நிர்வாகம். குறிப்பாக, பாதுகாப்புக் கருதி தலைநகரில் நடத்தவிருந்த போட்டிகளை நீக்கியுள்ளது.

ஐ.பி.எல். போட்டிக்கு பாதுகாப்பு அளிக்கமுடியாது என டில்லி பொலிஸார் வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டதால் இந்த மாற்றத்தை செய்துள்ளது. மும்பையில் அதிகமான போட்டிகளை நடத்த ஐ.பி.எல். நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

## உபாதையில் ஸ்ரீசாந்த்

மொகாலி, மார்ச்.19-

இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரும், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் முன்னணி வீரருமான ஸ்ரீசாந்த், முதுகுக் காயத்தினால் உபாதைக்குள்ளாகியுள்ளார். இதற்காக அவர் சிட்னியில் சிகிச்சை பெற்று வருகிறார். இதையடுத்து அவர் அடுத்த மாதம் தொடங்கத் திட்டமிட்டுள்ள 2ஆவது ஐ.பி.எல். போட்டியில் ஆடமாட்டார் என்று பஞ்சாப் அணியின் பயிற்சியாளர் ரொம் மூடி தெரிவித்துள்ளார். ஸ்ரீசாந்த் ஏற்கனவே கடந்த ஓராண்டு காலமாக இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டிருக்கிறார். இந்த நிலையில் மீண்டும் எழுந்துள்ள உடல் தகுதிப் பிரச்சினையால் ஜூன் மாதம் இங்கிலாந்தில் நடக்கும் ருவென்ரி 20 உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் அவருக்கு இடம்கிடைப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகரசபை மைதானத்தை பொதுமக்கள் பாவனைக்குப் பெற்றுத் தருக

## தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்20

சாவகச்சேரி நகர சபையின் பொது விளையாட்டு மைதானத்தை விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள் பயிற்சி பெறுவதற்காகவும் போட்டிகளை நடத்துவதற்காகவும் பெற்றுத் தருமாறு தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தென்னகத்தாரகை விளையாட்டுக்கழகம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்த விளையாட்டு மைதானத்தில் முன்னர் நகர்ப் பகுதியில் உள்ள விளையாட்டுக் கழகங்களின் வீரர்களும், பாடசாலை மாணவர்களும் பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

க்டந்த 2000ஆம்ஆண்டு தொடக்கம் இந்த மைதானம் அமைந்துள்ள பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டதால் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயிற்சிகளை மேற்கொள்ளமுடியாமல் உள்ளனர்.

பிரதேச செயலகத்தினால் வருடாவருடம் நடத்தப்படும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் பங்கு பற்றும் வீரர்கள், வீராங்கனைகள் உரிய பயிற்சிகள் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த மைதானம் பாவனைக்கு விடப்பட்டால் நாவற்குழி, கைதடி, மிருசுவில், வரணி, மட்டுவில், மந்துவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் பெரிதும் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே விரைவில் மைதானத்தை விடுவித்து நகரசபை மூலம் புனரமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-207)

## முன்பள்ளிச் சிறாருக்கு விளையாட்டு உபகரணம்

சுழிபுரம்,மார்ச்20

வலிகாமம் மேற்கு முன்பள்ளிச் சிறார்களுக்கு வலிகாமம் கல்வி வலயத்தினரால் விளையாட்டு உபகரணங்கள், செயல் நூல்கள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை சித்தன்கேணியில் உள்ள முன்பள்ளித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.குகநேசன் இவற்றை முன்பள்ளிகளுக்கு வழங்கினார். (203-28)




## விளையாட்டு மைதானத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் மண் அகழப்படுவதாக விசனம்



நாவற்குழி,மார்ச்20

கைதடியில் பொது விளையாட்டு மைதானத்திற்கென சாவகச்சேரி பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட காணியிலிருந்து அண்மைக்காலமாகப் பெருமளவு மண் கனரக வாகனங்களின் மூலம் அகழப்பட்டு ஏற்றிச் செல்லப்படுவதாக அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கைதடி சேது காவலர் பாடசாலைக்கு வடமேற்குப் பக்கமாகவுள்ள இப்பொதுக்காணியில் கடந்த சில நாள்களாக பெருமளவில் மண் ஏற்றப்பட்டு வருகின்றது.

தற்போது பலராலும் இவ்வாறு சட்டவிரோதமாக மண் ஏற்றப்பட்டு வருவதனால் இப்பகுதியில் நின்ற பல நிழல்தரும் மரங்கள் அழிக்கப்பட்டும் வருகின்றன.

இதனை நிறுத்த இப்பகுதியிலுள்ள சனசமூக நிலைய நிர்வாகிகள் முயற்சி செய்தபோதும் அது தோல்வியையே ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய அரச அதிகாரிகள் இவ்விடயத்தில் உரிய கவனமெடுத்து இச் சட்டவிரோதச் செயற்பாட்டை உடன் நிறுத்த நடவடிக்கை எடுப்பதுடன் இவ்வாறு மண் அகழ்ந்து விற்பனை செய்தோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கேட்டுள்ளனர். (203-288)

## மிருசுவில் இடைத்தங்கல் நிலையத்தில் செஞ்சிலுவைக் குழுவால் குடிதண்ணீர் வசதி

யாழ்ப்பாணம்,மார்ச்20

மிருசுவில் இடைத்தங்கல் நிலையத்தில் செஞ்சிலுவைச் சர்வதேச குழு குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அத்துடன் ஐந்து தற்காலிக மலசலகூடங்களையும் அமைத்துக்கொடுத்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தன்னார்வத் தொண்டர்களும் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினரும் இணைந்து தெல்லிப்பழை, கோப்பாய், மானிப்பாய் ஆகிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளின் 17 கிணறுகளைச் சுத்தம் செய்து வழங்கியுள்ளனர்.

இதேவேளை கிணறுகளைச் சுத்தம் செய்வதற்கென 4 பரல் குளோரினை யாழ். மாநகர சபைக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203)

## குடாநாட்டு விவசாயிகள் தற்போது சிறுதானியச் செய்கையில் ஆர்வம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

குடாநாட்டில் விவசாயிகள் சிறுதானிய பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

பெரும்போக நெல் அறுவடையை மேற்கொண்ட விவசாயிகள் மழை பெய்ததை அடுத்து மீண்டும் தமது வயல்களை உழுது சீர்செய்து வருகின்றனர்.

சிறுதானியப் பயிர்களை மேற்கொள்ள வசதியாக வயல் மற்றும் தோட்ட நிலங்கள் இவ்வாறு பண்படுத்தப்பட்டு பசளையிடப்பட்டு வருகின்றன.

பயறு, கௌப்பி, உழுந்து, எள் என்பன போன்ற சிறுதானியங்களே விதைக்கப் படவுள்ளதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த பல வருடங்களாகச் செய்கை பண்ணப்படாதிருந்த தரிசு நிலங்கள் பலவற்றைப் பண்படுத்தி வெங்காயம், புகையிலை போன்ற பயிர்ச் செய்கையிலும் கூடிய ஆர்வம் காட்டி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் பல்வேறு தொழிலாளர்களுக்கும் தேவை அதிகரித்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (203-224-72)

## சமுர்த்தி முத்திரை விநியோகம்

நவாலி,மார்ச்20

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களுக்கான உணவு முத்திரைகள் தற்போது அப்பிரிவு கிராமசேவையாளர் அலுவலகத்தில் வைத்துச் சமுர்த்தி உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு வருகின்றன. (203-100)

## புதிய கிராமசேவையாளர் பயிற்சிக்கு இணைப்பு

நவாலி,மார்ச்20

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புதிதாக நியமனம் பெற்ற 4 கிராம சேவையாளர்கள் பயிற்சிக்காக இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (203-100)

# விவசாயச் செய்கைக்கு ஒவ்வாத மண்ணில்கூட முயற்சியால் ஒருவர் சிறந்த பயன்பெற முடியும்

## தென்மராட்சிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

நல்லூர்,மார்ச்20

கடினமான சூழ்நிலையிலும் விவசாய நடவடிக்கைகளுக்கு ஒவ்வாத மண்ணில் கூட தன்னுடைய முயற்சியால் ஒருவர் சிறந்த பயனை நிச்சயமாக எட்டமுடியும் என்ற உண்மை இங்கே தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன்.

நாட்டைக் கட்டியெழுப்புவோம் 2008-2010 திட்டத்தின்கீழ் தனியார் வீட்டுத் தோட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்ற தாவளை இயற்றாலையைச் சேர்ந்த செல்வி சுதர்சினியின் தோட்டத்தில் வீட்டுத்தோட்டச் செய்கை வயல் விழாவும் கண்காட்சியும் சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் க. விஜயகுமார் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

விவசாய நடவடிக்கைகளைச் சிறந்த முறையிலும் நீரைச் சிக்கனப்படுத்தியும் மேற்கொண்டு ஏனையோருக்கு முன்மாதிரியாக இந்தப் பிரதேசம் விளங்க செல்வி சுதர்சினி அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்.

நமது உழைப்பு உறுதியான வகையில் அமையும்போது நிவாரணங்களை எதிர் பார்க்கவேண்டிய தேவையும் இருக்காது. கணிசமான வருமானத்தையும் பெறமுடியும்.

தமது பொருளாதார வளங்களைப் பெருக்கக் கூடியதாக கல்வியுடன் ஓய்வுநேரங்களை இதுபோன்ற பயனுள்ள விடயங்களில் அக்கறை காட்டினால் நமது தேவைகளை நாமே பூர்த்திசெய்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்தப் பிரதேசத்தில் இதுபோன்ற நல்ல நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெறக்கூடியதாக விவசாயிகள் உட்பட அனைத்து மக்களுமே உந்துசக்தியாக விளங்கவேண்டும் - என்றார்.

வளம் குறைந்த இடத்தில் பல்வேறு தொழில்நுட்பங்களைக் கையாண்டு இந்த வீட்டுத்தோட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ள இவர் பாராட்டுக்குரியவர் என விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

உதவி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீ பாலசுந்தரம், மந்துவில் ஸ்ரீபாரதி பாடசாலை அதிபர் வே.விநாயகமூர்த்தி, கிராம அலுவலர் எஸ்.மகாதேவன் உட்பட பலர் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்களெனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (203-111)

## வீட்டுத்திட்டப் பயனாளிகள் பட்டியல் வெளியானது

நவாலி,மார்ச்20

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2009ஆம் ஆண்டுக்கான வீட்டுத்திட்டப் பயனாளிகள் பட்டியல் வெளியாகியுள்ளது.

இப்பட்டியலில் சாந்தை, இளவாலை, மாகியப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். (203-100)



தாவளை, இயற்றாலையில் நடைபெற்ற வீட்டுத்தோட்டச் செய்கை வயல்விழா கண்காட்சியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் க.விஜயகுமார் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்ற வெற்றியாளர் ரி.சுதர்சினி தனது அனுபவங்கள் குறித்த விபரங்களை விளக்குவதை இரண்டாவது படத்திலும் உருளைக்கிழங்கு பரீட்சார்த்த செய்கையில் கிடைத்த கிழங்குகளையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிய பிரஜைகளைக் கௌரவமாக நடத்துவது இளைய தலைமுறையினரின் கடமையாகும்

டாக்டர் எஸ்.குமுதினி
பொதுச்சுகாதார ஆயுள்வேத வைத்திய அதிகாரி

இன்றைய அவசர உலகில் 'முதுமை' என்பது ஓர் 'சுமை' ஆகிவிட்டது. முதுமை வாழ்ந்து முடித்ததற்கான அடையாளம் அல்ல என்பதை இன்றைய இளம் சமூகத்தினர் புரிந்துகொள்ள வேண்டும். வாழவும் முடியாமல் சாகவும் வழிதெரியாமல் நம்மிடையே தவிக்கின்ற நம் சிரேஷ்ட பிரஜைகளை கௌரவமாக வாழ உதவுவது இளைய சமூகத்தின் கடமை. ஏனெனில் நாமும் என்றோ ஒருநாள் 'முதுமை' அடையப் போகின்றோம் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

முதியவர்கள் என்றதும் எமக்கு இரண்டு வார்த்தைகள் நினைவிற்கு வரும். அவை
1.மாறாட்டம் (Confusion)
2.அறளை பெயர்தல் (Dementia) என்பனவாம்.

**1. மாறாட்டம்**

''உடல் நோய்களினால் மூளைக்கு ஏற்படுகின்ற தாக்கத்தின் அறிகுறி'' என விளங்கிக்கொள்ள முடியும். இம்மாறாட்டங்களிற்கு நீண்ட, நாட்டப்பட்ட மூளையைப் பாதிக்கும் நோய்கள் தவிர சடுதியாகத் தோன்றும் பாரிசவாதம் போன்ற நோய்களும் காரணமாகலாம்.

**2. அறளை பெயர்தல்**

''உயிர் வாழும் உடலில் இறக்கும் மூளை'' எனக் கொள்ளப்படுகின்றது. இது 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களில் 5% ஆகவும் 80 வயதிற்கும் 85 வயதிற்கும் இடைப்பட்ட முதியவர்களில் 10% ஆகவும் காணப்படுகின்றது. 'அறளை' மாற்ற முடியாத ஒரு நோய்நிலை என்பதனையும் நோயாளி ஒரு சிறுகுழந்தை போல் மாறி விடுவதையும் உறவினர்கள்/பராமரிப்பாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இதற்கு நாம் முதுமையடைந்த நோயாளியுடன் அன்போடு, ஆதரவுடன் நடந்துகொள்ளுதல், வாழ்கின்ற சூழலை குழப்பம் இன்றி அமைத்தல் மூலம் புனர்வாழ்வளிக்கமுடியும்.

**சமூகத்தின் பங்களிப்பு**

முதியவர்/சிரேஷ்ட பிரஜையும் சமூக பிராணியாக உள்ளமையால் அவர்கள் சமூகத்திலிருந்து விலகிப்போக முடியாமலும் தான் சார்ந்துள்ள சமூகத்தில் ஆரோக்கிய முதுமையை முன்னெடுக்க முடியாமலும் தவிப்பது பலருக்குப் புரிவதில்லை. இதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

1. அன்பு, அரவணைப்பு, முதுமையை எட்டிய பெற்றோரிடம், சுற்றத்தாரிடம் காண்பிக்கவேண்டும்.

2. முதுமையை அடைந்துவிட்டால் துணையின்றி வாழ்வது என்பது கஷ்டமாகும். எனவே முதியவர்களை ஒதுக்கிவைப்பதையோ முதியவர் விடுதிகளில் சேர்ப்பதையோ இயலுமானவரை தவிர்க்க வேண்டும்.

3. ஓய்வுகாலத்தில் சும்மா இருப்பதாகக் குத்திக் காட்டுவது, தனித்து விடப்படுவது, புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும். இதனால் முதியவர்கள் உளநெருக்கீடுகளிற்கு (Emotional Stress) ஆளாகிறார்கள்.

4. ஒவ்வொரு மனிதனது மனமும் தெரிந்தோ தெரியாமலோ அமைதிக்கான தேடலில் ஈடுபடுகின்றது. எனவே இதற்கு முதியவர்களும் விதிவிலக்கல்ல. அவ்வாறான சூழலை நாம் அவர்களுக்கு உருவாக்கிக்கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

5. ஐக்கிய அமெரிக்காவில் 17 முதியவர்கள் தினமும் தற்கொலை செய்து கொள்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. முதியவர்களை நாம் ஆன்மீகப் பாதை வழி செல்ல உதவவேண்டும்.

6. நலிந்த முதியவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் ஆரோக்கிய முதுமையினூடான அவர்களின் பங்களிப்பினை உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஏனெனில் ஒவ்வொரு முதியவரும் வாழ்க் கையில் கிடைத்தற் கரிய புத்தகங் கள் ஆவர்.

7. இன்று யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை அநேகமான முதியவர்கள் பிள்ளைகள், உறவினர்கள் இன்றித் தனித்து விடப்பட்டுள்ளனர். அகதிமுகாம்களில் வாழ்க்கையை நடத்துகின்றார்கள். இதனால் ஏற்படுகின்ற தனிமை, வெறுமை அவர்களை உளரீதியாகப் பாதிக்கின்றன. எனவே முதியவர்களுடன் கலகலப்பாக ஆதரவாகப் பேசி அவர்களுக்குப் பிள்ளைகளாக இருங்கள். அப்போது முதுமையின் வேதனை அவர்களுக்குத் தெரியாது. ✱

## மேல்மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க 35,000 பேர் தகுதி என அறிவிப்பு

மேல் மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 35 ஆயிரத்து 424 பேர் தகுதி பெற்றுள்ளனர். 5ஆயிரத்து 676 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன என தேர்தல் செயலகம் தெரிவித்தது.

கம்பஹா மாவட்டத்தில் 15 ஆயிரத்து 789 விண்ணப்பதாரிகள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அங்கு ஆயிரத்து 102 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டத்தில் 10 ஆயிரத்து 926 விண்ணப்பதாரிகள் தகுதி பெற்றுள் ள னர். அங்கு ஆயி ரத்து 239 விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 699 விண்ணப்பதாரிகள் தகுதி பெற்றுள்ளனர். அங்கும் 3 ஆயிரத்து 338 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர் வரும் மாதம் 2 ஆம்,3ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிப்பு நடைபெறவுள்ளது என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. இம்முறை தேர்தல் பணிக்காக 45 ஆயிரம் அரச ஊழியர்கள் சேவை யில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் அந்தச் செயலகம் தெரிவித்துள்ளது.

(த-10)

## சேவை நலன் பாராட்டு விழா

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் அனுசரணையுடன் இளைப்பாறிய அதிபர் ஆ.ஜெகநாதனின் சேவைநலன் பாராட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் சட்டத்தரணி சபா ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவர் சே. ஏகாம்பரநாதன் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார். (204-236)


இளவாலை அருள்மிகு
ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் தேவஸ்தானம்
பஞ்சமுக விநாயகர் வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசாமி
தன பிரதிஷ்டா பஞ்சகுண்ட பட்க்ஷ

மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

இன்று (20.03.2009) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு
கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்
22.03.2009 ஞாயிற்றுக்கிழமை
காலை 6.30 மணிமுதல் 7.15 மணிவரையுள்ள
சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம்
கும்பாபிஷேக பிரதம குரு:
''சிவாகம கிரியா தத்துவநிதி''
சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயக்குமாரக் குருக்கள்
(மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்)
உபயம்:
ஆலய ஆதீன குரு,
ஏழூர் நாயகம் ஈஸ்வரன் குடும்பம்.

மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2009

29.03.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு
துவஜாரோகணம் கொடியேற்றம்
07.04.2009 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு
சப்பறத் திருவிழா
08.04.2009 புதன்கிழமை காலை 9 மணிக்கு
தேர்த் திருவிழா
09.04.2009 வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு
தீர்த்தோற்சவம்
10.04.2009 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு
பூங்காவனத் திருவிழா

மஹோற்சவ பிரதம குரு: சிவாச்சார்ய சிரோன்மணி
சிவஸ்ரீ இராம.பாலச்சந்திரக் குருக்கள் (ஆதீனகுரு).
(83627) தேவஸ்தானத்தினர்.



ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்
25ஆவது ஆண்டு வெள்ளி விழா பரிசளிப்பு விழாவை
முன்னிட்டு நடத்தும்

சிறப்பு விளையாட்டுப் போட்டிகள் - 2009

மரதன் - 5Km (1ஆம் பரிசு தங்கப் பதக்கம்)
கயிறு இழுத்தல் (1ஆம் பரிசு வெற்றிக் கேடயம்)
விண்ணப்ப முடிவுத் திகதி நாளை (21.03.2009) சனிக்கிழமை. வீரர்கள் விரைந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
1125, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். நிர்வாகம்.
(83643)



இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தன் வைத்திலிங்கம்

அப்பா! நீங்கள் மறைந்து இரண்டாண்டுகள் கரைந்து விட்டதுவே
ஆறவில்லை நம் துயரம் அழுகின்றோம் துடிக்கின்றோம்
இங்கிருந்து இடுக்கண்கள் களைந்து என்றவனின் துயர் பார்க்கின்றோம்
இப்படித்தான் வாழ வேண்டுமென வாழ்ந்து காட்டிய அப்பாவே!
உத்தமனாய் வாழ்ந்த உங்களை உலகமே போற்றுகிறது
எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பர்
இதையும் தாங்க எமக்கேது இதயம்
உயிருடன் வாழும் வரை...

மலர்வு:16 ✱ 08 ✱ 1950
உதிர்வு:13 ✱ 03 ✱ 2007

பாரதி வீதி,
பத்தமேனி, அச்சுவேலி. (83556) குடும்பத்தினர்.



நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ் மண்ணில்
01 ✱ 01 ✱ 1950



பாரத மண்ணில்
04 ✱ 03 ✱ 2005

''சிவநெறிச் செம்மல், பண்ணிசை கலாநிதி இசை அரசு,
திருமுறை திலகம், இசைக்குயில்

அமரர் S.K.சிவபாலன் அவர்கள்
''இசைப் பேராசிரியர்''
(அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம் - இந்தியா)

திதி: அபரபக்க நவமி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகி விட்ட
எங்கள் குடும்ப விளக்கு ஆண்டுகள் நான்காகினும்
மாறாதையா எங்கள் பாசம்

க.சிவயோகராணி J.P.
பாடசாலை ஒழுங்கை,
சித்தன்கேணி. (83478)

உங்கள் பிரிவால் வாடும்:
சகோதரிகள், சகோதரன், மைத்துனர்,
பெறாமக்கள், மருமகன், மருமகள்.



விற்பனைக்கு

SLT தொலைபேசி இணைப்பும், சிட்டையிடும் இயந்திரம், ரெலிபோன் பூத் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 9110



விற்பனைக்கு

உத்தியோகத்தர் ஒருவரின் தனிப்பாவனையிலுள்ள மிகக் குறுகிய தூரம் ஓடிய யமஹா (Yamaha News Mate) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. S.இராமலிங்கம், நாவலர் மடம் பாடசாலை எதிரில், பருத்தித்துறை பிரதான வீதி, கரவெட்டி. பார்வையிடும் நேரம் சனி, ஞாயிறு பி.ப. 4-5 மணி வரை மட்டும். (சி/557570)



STUDY IN INDIA
GARDEN CITY COLLEGE
BANGALORE UNIVERSITY DEGREES
Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK
Courses Offered
BCA Bachelor of Computer Application
B.Sc. Computer Science/Microbiology/Genetics Biotechnology/Fashion and Apparel Design
B.A. Journalism/B.Com Computers
BBM Bachelor of Business Management
BHM Bachelor Of Hotel Management
BPT Bachelor of Physiotherapy
LAW Bachelor of Law
* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.
More than 200 Sri Lankan Students presently studying
www.studyingcc.com
[illegible]
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.



முதலாம் வருட நீங்காத நினைவுகள்

மனிதனாக
12 ★ 03 ★ 1917



மா மனிதனாக
31 ★ 03 ★ 2008

அமரர் மாண்புமிகு மா.வீ.ஆறுமுகம்
(பிரபல அரிசி, நெல் வர்த்தகர் - சாவகச்சேரி,
ஆரம்ப கர்த்தா - ஆறுமுகம் மில் சரசாலை)

திதி: பூர்வபக்க நவமி (20.03.2009)
உங்கள் இனிய வாழ்வின் பயனாக 'சிவ'மான பிள்ளைகளானோம்
உங்கள் செல்வத்தால் வளமான கல்வியுடன் பெருவாழ்வும் பெற்றோம்
உங்கள் ஆற்றல் மிகு பெருமையால் ஊர்போற்றும் உத்தமர்களானோம்
உங்கள் பங்களிப்புடன் இனிய இல்வாழ்வையும் சந்ததி வளர்ச்சியையும் பெற்றோம்.
அன்று போல் இன்றும் ...
கண்ணாடிச் சட்டத்தில் நின்றுகொண்டு ஒளிவீசும் தெளிவான
பார்வையால் கருணை ஒளிவீசி, நல்வழிகளைக் காட்டும் எமது
நெஞ்சமெல்லாம் நிறைந்த 'அப்பு' வை இன்று என்ன!
வாழ் நாள் முழுவதும் தான் மறப்போமா?

மா த்தடி ஒழுங்கை,
கண்டிவீதி, கொடிகாமம்.
தொ.பே: 077 4004194

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
ஏ.எஸ்.ஞானம் (கட்டட ஆலோசகர்).
(83632)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA
(Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)

## Last week continuity.....

| Am, Is, Are - Sentences | வாக்கியங்கள் |
|---|---|
| 01. My name is Santhuru. | என்னுடைய பெயர் சந்துரு. |
| 02. My sister's name is Ramya. | என்னுடைய சகோதரியின் பெயர் ரம்யா. |
| 03. I am in Sri Lanka. | நான் இலங்கையில் இருக்கிறேன். |
| 04. I am a student. | நான் ஒரு மாணவன். |
| 05. You are late again. | நீ திரும்பவும் பிந்திவிட்டாய். |
| 06. We are good friends. | நாங்கள் நல்ல சிநேகிதர்கள். |
| 07. Your keys are on the table. | உனது திறப்புகள் மேசைமேல் உள்ளன. |
| 08. I am tired but, I, am not happy. | நான் களைத்துவிட்டேன், ஆனால் நான் மகிழ்ச்சியாக இல்லை. |
| 09. Those people aren't Sinhalese. | அந்த மக்கள் சிங்களவர்கள் அல்லர். |
| 10. He is interested in music. | அவன் சங்கீதத்தில் விருப்பம் உள்ளவன். |
| 11. Am I late? | நான் பிந்திவிட்டேனா? |
| 12. Is your father at home? | உமது தந்தையார் வீட்டில் இருக்கிறாரா? |
| 13. It is hot in your room. | உனது அறை சூடாக உள்ளது. |
| 14. Are they new? | அவைகள் புதியனவா? |
| 15. Are your shoes new? | உன்னுடைய சப்பாத்துகள் புதியனவா? |

### Present Tense Sentences - Am, Is, Are
### Positive Sentences - உடன்பாட்டு வாக்கியங்கள்

| | |
|---|---|
| 01. I am at the office. | நான்அலுவலகத்தில் இருக்கிறேன். |
| 02. He is there. | அவன் அங்கு இருக்கிறான். |
| 03. She is a teacher. | அவள் ஓர் ஆசிரியை. |
| 04. It is in the garden. | அது தோட்டத்தில் இருக்கிறது. |
| 05. You are in the playground. | நீவிளையாட்டுமைதானத்தில் நிற்கிறாய். நீங்கள் விளையாட்டுமைதானத்தில் நிற்கிறீர்கள். |
| 06. We are at the school. | நாங்கள்பாடசாலையில் இருக்கிறோம். |
| 07. They are at the hotel. | அவர்கள் ஹோட்டலில் இருக்கிறார்கள். அவை ஹோட்டலில் இருக்கின்றன. |

### Negative Sentences - எதிர்மறை வினாவாக்கியங்கள்

| | |
|---|---|
| 08. I am not at the office. | நான் அலுவலகத்தில் இல்லை. |
| 09. He is not there. | அவன் அங்கு இல்லை. |
| 10. She is not a teacher. | அவள் ஓர் ஆசிரியை அல்லள். |
| 11. It is not in the garden. | அது தோட்டத்தில் இல்லை. |
| 12. You aren't in the playground. | நீ விளையாட்டு மைதானத்தில் இல்லை. நீங்கள் விளையாட்டுமைதானத்தில் இல்லை. |
| 13. We are not at the school. | நாங்கள் பாடசாலையில் இல்லை. |
| 14. They are not at the hotel. | அவர்கள் ஹோட்டலில் இல்லை. அவை ஹோட்டலில் இல்லை. |

### Question form Sentences - வினாவாக்கியங்கள்

| | |
|---|---|
| 15. Am I at the office? | நான்அலுவலகத்தில் இருக்கிறேனா? |
| 16. Is he there? | அவன் அங்கு இருக்கிறானா? |
| 17. Is she a teacher? | அவள் ஓர் ஆசிரியையா? |
| 18. Is it in the garden? | அது தோட்டத்தில் இருக்கிறதா? |
| 19. Are you in the playground? | நீ விளையாட்டு மைதானத்தில் இருக்கிறாயா? நீங்கள் விளையாட்டு மைதானத்தில் இருக்கிறீர்களா? |
| 20. Are we at the school? | நாங்கள்பாடசாலையில் இருக்கிறோமா? |
| 21. Are they at the hotel? | அவர்கள் ஹோட்டலில் இருக்கிறார்களா? |

### Past

| Did I/we/you/they/he/she/it have to | I/We/You/They/She/He/It didn't have to |
|---|---|
| 01. Did I have to take break fast? நான் காலைச்சாப்பாடு சாப்பிட வேண்டியிருந்ததா? | I didn't have to take break fast. நான் காலைச்சாப்பாடு சாப்பிடவேண்டி இருக்கவில்லை. |
| 02. Did we have to take lunch? நாங்கள் பகல்சாப்பாடு சாப்பிடவேண்டியிருந்ததா? | We didn't have to take lunch. நாங்கள் பகல் சாப்பாடு சாப்பிடவேண்டி இருக்கவில்லை. |
| 03. Did you have to drink tea? நீ தேநீர் அருந்தவேண்டியிருந்ததா? நீங்கள் தேநீர் அருந்தவேண்டியிருந்ததா? | You did not have to drink tea. நீ/நீங்கள்தேநீர்அருந்தவேண்டி இருக்கவில்லை. |
| 04. Did they have to take dinner? அவர்கள் இரவுச்சாப்பாடு சாப்பிடவேண்டியிருந்ததா? | They did not have to take din ner. அவர்கள் இரவுச்சாப்பாடு சாப்பிட வேண்டி இருக்கவில்லை. |
| 05. Did she have to take a drink? அவள் மதுபானம் அருந்தவேண்டியிருந்ததா? | She did not have to take a drink. அவள் மதுபானம் அருந்தவேண்டி இருக்கவில்லை. |
| 06. Did he have to drink coffe? | He did not have to drink coffe. |

### Have (got) to and must

01. I must stop smoking. (I want to stop smoking)
நான் புகைப்பிடிப்பதை நிறுத்தவேண்டும். (நான் புகைப்பிடிப்பதை நிறுத்த விரும்புகிறேன்)

02. It's a fantastic film. You must see it & You have to see it.
இது திறமான படம். இதை நீ பார்க்கவேண்டும்; பார்த்தேயாகவேண்டும்.

03. In Singapore men have to do military service.
சிங்கப்பூரில் ஆண்கள் இராணுவத்தில் சேவையாற்ற வேண்டும்.

04. You must try to get work on time.
நீ குறித்த நேரத்தில் வேலையைச் செய்விக்க வேண்டும்.

05. I must make an appoinment with the dentist.
நான் பல் டாக்டரைச் சந்திக்க நேரம் கேட்டுப்பெறவேண்டும்.

06. This is an aweful party-we really must go.
இது ஒரு பயங்கர விருந்து-நாங்கள் போய்த்தான் ஆகவேண்டும்.

07. Catholics have to go to church on sunday.
கத்தோலிக்கர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்துக்குச் செல்லவேண்டும்.

08. I told him he must make a decision.
அவன் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும் என்று நான் அவனுக்குச் சொன்னேன்.

09. You musn't tell your friend.
நீ உனது நண்பனுக்குச் சொல்லக்கூடாது.

### Auxiliary Verbs - Can and Could
### துணை வினைச்சொற்கள் Can and Could

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I | | do. | | I | do? |
| We | | sing. | | we | sing? |
| You | can | play. | | you | play? |
| They | can't | dance. | Can | they | dance? |
| He | cannot | drive. | | he | drive? |
| She | | speak. | | she | speak? |
| It | | swim. | | it | swim? |

| | | |
|---|---|---|
| I can do. | I can't do. | Can I do? |
| என்னால் செய்யமுடியும். | என்னால் செய்யமுடியாது. | என்னால் செய்யமுடியுமா? |
| We can sing. | We can't sing. | Can we sing? |
| எங்களால் பாடமுடியும். | எங்களால் பாடமுடியாது. | எங்களால் பாடமுடியுமா? |
| You can play. | You can't play. | Can you play? |
| உன்னால் விளையாட முடியும். | உன்னால் விளையாட முடியாது. | உன்னால் விளையாட முடியுமா? |
| They can dance. | They can't dance. | Can they dance? |
| அவர்களால் நடனமாட முடியும். | அவர்களால் நடனமாட முடியாது. | அவர்களால் நடனமாட முடியுமா? |
| He can dance. | He can't dance. | Can he dance? |
| அவனால் நடனமாட முடியும். | அவனால் நடனமாட முடியாது. | அவனால் நடனமாட முடியுமா? |
| She can speak. | She can't speak. | Can she speak? |
| அவளால் பேச முடியும். | அவளால் பேச முடியாது. | அவளால் பேச முடியுமா? |
| It can swim. | It can't swim. | Can it swim? |
| அது நீந்தும். | அதனால் நீந்த முடியாது. | அதனால் நீந்த முடியுமா? |
| They can play. | They can't play. | Can they play? |
| அவர்களால் விளையாட முடியும். | அவர்களால் விளையாட முடியாது. | அவர்களால் விளையாட முடியுமா? |

**We use - "can you" or "could you" when we ask people to do things.**
**''உன்னால் முடியுமா'' என்பதை நாங்கள் ஒருவரை ஏதாவது செய்யச்சொல்லும்போது பயன்படுத்துகிறோம்.**

01. Can you play? could you open the door? could you wait?
உன்னால் விளையாட முடியுமா? நீ கதவைத் திறப்பாயா? நீ தாமதிப்பாயா?

02. Can you tell where is this please?
தயவுசெய்து இடம் எங்கு உள்ளது என்று சொல்வாயா?

03. Can I have the pen please?
தயவுசெய்து உமது பேனாவைத் தரமுடியுமா?

04. Can I borrow your umbrella?
உமது குடையைக் கொஞ்சம் தருவீரா?

05. Can you wait a moment please?
தயவுசெய்து உங்களால் சிறிதுநேரம் தாமதிக்க முடியுமா?

**Continued next week....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ அம்மா பகவானின் 60 ஆவது ஜென்ம தினநிகழ்வு அண்மையில் சுழிபுரம் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வை செல்வி சி.சிவவேணிஜி ஆரம்பித்து வைப்பதையும் கூட்டுப் பிரார்த்தனை இடம் பெறுவதையும் படங்களில் காணலாம்.



நவாலி வடக்கு தேற்றா மரத்தடி ஞான வைரவர் ஆலய சுற்றுமதில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி ரவீந்திரன் அடிக்கல்லினை நடுவதையும் ஆலய அறங்காவலர் சி.இராஜேஸ்வரன், கிராம உத்தியோகத்தர் சி.தனபாலரத்தினம் மற்றும் பலர் நிற்பதையும் படத்தில் காணலாம். (9)



பொலிகண்டி உப்புக் கிணற்றடிப் பிள்ளையார் கோவிலில் ஸ்தபதி வி.அம்பிகை பாகனால் நிர்மாணிக்கப்பட்ட புதிய கேடகத்தில் விநாயகப் பெருமான் வீதி உலா வெள்ளோட்டமாக வருவதைக் காணலாம். (படம்: கர்ணன்)



அளவெட்டி அழகோலைப் பிள்ளையார் ஆலய சங்காபிஷேக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அன்றைய தினம் சுவாமி வீதியுலா வந்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்: எஸ்.கதிரவேலு)

# பெற்றோருடன் சேர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதால் பிள்ளைகளின் கல்வி வீணடிக்கப்படுகின்றது

## ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் கவலை

நவாலி, மார்ச்20

குடாநாட்டில் சகல வசதிகளிருந்தும் மாணவர்கள் ஒழுங்காகக் கல்வியைக் கற்பதில்லை. மாணவர்கள் தாய், தந்தையருடன் சேர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதே இதற்குக் காரணமாகும். இதனால் அவர்களின் கல்வி வீணடிக்கப்படுவதுடன் எதிர்காலமும் பாழடிக்கப்படுகிறது.

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன்.

'யுனிசெவ்' நிறுவனத்தின் ஆதரவுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம் நடத்திய கல்வித்தின விழாவில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் எத்தனையோ பிள்ளைகள் படிக்க முடியாது பெரும் அவலங்களை எதிர்நோக்குகின்றனர். ஆனால் எமது பிரதேசத்தில் அவ்வாறான நிலைமை இல்லை. இருந்தும் மாணவர்கள் ஒழுங்காகக் கல்வியைக் கற்பதில்லை.

மாணவர்களை நல்ல பிரஜைகளாக்கும் பொறுப்புப் பெற்றோர்களிலும், ஆசிரியர்களிலும்தான் தங்கியுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி கல்வி, விளையாட்டு, கலை போன்ற சகல துறைகளிலும் முன்னேறுவதுடன் மாகாணம், மாவட்டம் ஆகியவற்றிலும் தெரிவு செய்யப்படுவது பாராட்டுக்குரியது - என்றார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி, சண்டிலிப்பாய் கோட்ட முன்னாள் கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம், வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர், 'யுனிசெவ்' நிறுவன இணைப்பாளர் எஸ்.கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் கோட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில், ஜி.சீ.ஈ. சாதாரணதரம், உயர்தரம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கும், மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகியவற்றுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(203-204-100)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச்20

இளவாலை ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் 7.15 வரை நடைபெறவுள்ளது. (201)

* * * *

உரும்பிராய் வடக்கு நாச்சிமார் அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.28. மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பத்து நாள்கள் காலை 8.30 மணிக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். அடுத்த மாதம் 02 ஆம் திகதி நாச்சிமார் அம்மனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (201)

* * * *

இணுவில் - மருதனார் மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலில் ஸ்ரீராம நவமி உற்சவ பஞ்சரத்ன கீர்த்தனை ஆராதனை விழா அடுத்த மாதம் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (201)

## மங்கலாய் எரியும் மின்விளக்குகள்

வடமராட்சி, மார்ச்20

புலோலி கிழக்கு வராத்துப்பளைப் பகுதியில் மின்விளக்குகள் மிக மங்கலாகவே எரிவதாக அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிக்கென முன்னர் இருந்து வந்த மின்மாற்றி வேறு பகுதிக்கு மாற்றப்பட்டு அங்கிருந்தே இப்பகுதிக்கான மின்சாரம் வந்தடையும் நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து மின்விளக்குகள் யாவும் மங்கலாக எரிவதாகக் குடியிருப்பாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மங்கலான மின்சாரத்தினால் எதுவித பயனையும் பெற்றுக்கொள்ளமுடியாதிருப்பதால் இப்பகுதிக்கு வலுவான மின்சாரத்தை வழங்க உரிய நடவடிக்கைகளை மின்சார சபை மேற்கொள்ளவேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர். (203-236)

## மனிதப் பிறவியின் மகத்துவம்

இப்பரந்த நிலவுலகின் கண்ணே பல்வேறு ஜீவராசிகள் பிறந்து, இறந்து உழல்கின்றன. அதில் மனிதப் பிறவி எடுத்த ஜீவாத்மாக்கள் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்த காரணத்தால் புனிதப்பிறவி எடுத்துள்ளன. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்' அரிது என்றார் ஔவையார். ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு படைத்த மானிட ஜென் மம் ஒரு சிறந்த அதிஉன்னத பிறவியாகும்.

'இது தீயது; இது நல்லது' என்று பகுத்தறியும் பண்பு இம்மானிட ஜென்மத்துக்கு மட்டுமே உண்டு. ஆகவே, மனிதன் மனிதனாக வாழப் பழகுதல் வேண்டும். மனித உருவிலிருந்து கொண்டு மிருகமாக வாழ்தல் கூடாது.

நல்ல பழக்க வழக்கம், உண்மை, நேர்மை, புலாலுண்ணாமை பிறர்மனை விரும்பாமை முதலிய நற்பண்புகள் மனிதனுக்கு இன்றியமையாதவை. மனித வாழ் வில் உண்மையும் நேர்மையும் மிக மிக அவசியம். வாழ்ந்த வாயும் நினைக்க மட நெஞ்சம் தாழ்த்தச் சென்னியும் தந்தது எதற்காக? சிவபெருமானை வணங்கி, வாழ்த்தி, மகிழ்ந்து முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

மனிதன் உயர்திணை; இருந்தபோதிலும் அஃறிணையாகிய காகம், நாய், பசு முதலானவற்றிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. காகம் தனக்கு ஏதாவது உணவு கிடைத்துவிட்டால் போதும். உடனே 'கா கா' என்று கரைந்து தனது இனத்தை அழைத்து அவைகளுடன் சேர்ந்தே உண்ணும்.

## ஞானக்கதிர்

நாயைப் பாருங்கள். அது தனது எஜமானிடம் மிகுந்த அன்புகாட்டி ஒரு ரொட்டித்துண்டு போட்டதற்காகத் தன்னுடைய வாலை ஆட்டி நன்றி தெரிவிக் கின்றது. பசுவை எடுத்துக்கொண்டால் தன்னை வளர்ப்பவனுக்கு பால் கொடுக்கிறது. இது எவ்வளவு தூரம் சிந்தனைக்குரியது என்று யோசித்துப் பாருங்கள். ஆகவே மனிதன் மனிதனாக வாழ முதலில் பழகிக்கொள்ளவேண்டும். மிருகங்களை விடக் கேவலம் இன்றைய மனித வாழ்வு.

முதலில் எவ்வளவு துன்ப துயரங்கள் வந்தாலும் எவ்வளவு கஷ்டங்கள், வேதனைகள் வந்தாலும் எப்போதும் உண்மையே பேசி வந்தோமேயானால் சிறந்த சௌபாக்கிய வாழ்வு நிச்சயம் கிடைக்கும். அரிச்சந்திரன் விசுவாமித்திர முனிவரால் கடுந் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டபோதும் சத்தியம் தவறவில்லை. உண்மையே பேசி வாழ்வில் நன்மையே அடைந்தான்.

எனவே, மனிதப் பிறவியின் மகத்துவத்தை முதலில் சிந்தித்துப் பாருங்கள். தம்முடைய எண்ணங்களை மற்றவருக்கு எடுத்துக் கூறும் வாயுள்ளவன் மனிதன். வாயில்லா ஜீவன்களை வதைத்து வயிறு வளர்க்கும் மனிதனை எந்த ரகத்தில் சேர்ப்பது? சீவெட்கமில்லை. ஏ மனிதா! சிந்தித்துச் செயற்படு. சந்தோஷத்தை வெளிக்காட்ட புன்னகைத்துச் சிரிக்கும் பண்பு மனித குலத்துக்கே சொந்தமானது. ஒருவருக்கொருவர் உதவிட இந்த மானிடப் பிறப்பே உகந்ததாகும்.

ஆகவே, மனிதப் பிறவியின் புனிதத்துவத்தை உணர்ந்து நாம் வாழத் தலைப்படுவோமேயானால் உலகில் துன்பமே இருக்காது. நீதி மன்றங்கள், காவல் நிலையங்கள் எதுவுமே தேவையில்லை. வாழ்க்கை வளமுடன் தேனாக இனிக்கும்.

'கடவுள் ஒருவர் இருக்கின்றார்' என்பதை மனதில் நிலை நிறுத்தி மனச்சாட்சிப்படி நல்லதையே சிந்தித்து நல்லதையே செய்து, நல்லவற்றை எதிர்பார்த்து நம்முடைய வாழ்வை நல்லதாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

செய்வார்களா?

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியில் பிளவை ஏற்படுத்துவது நோக்கமல்ல அதனை ஒன்றிணைப்பதே எமது விருப்பம்

## ஊடகவியலாளர் மாநாட்டில் கரு ஜெயசூரிய

கொழும்பு, மார்ச் 20

கட்சியில் பிளவு ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல, கட்சியை ஒன்று இணைப்பதே எமது நோக்கம். இலங்கையில் மாகாணசபைகளின் சேவைகள் தொடர்பில் திருப்தியடையக் கூடியதாக உள்ளது. இந்தியாவில் பிரதேச சபைகள் மத்திய அரசுக்கு ஊக்கம் அளிப்பதாகவே உள்ளன. அதே போன்றும் எமது நாட்டிலும் மாகாண சபை மற்றும் பிரதேச சபைகள் அரசுக்கு ஆதரவளிக்க வேண்டும் - என்று அமைச்சரும் ஐ.தே.க.வின் உப தலைவருமான கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:

மேல் மாகாணசபைத் தேர்தலில் களுத்துறை, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் போட்டியிட திறமையான குழு ஒன்றை நாம் ஒருங்கிணைத்துள்ளோம். எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சுமுகமான நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதொடர்பில் கட்சியின் குழுவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தலில் ஈடுபட்ட நீதிபதிகள், சமூக சேவையாளர்கள், திரைப்படக் கலைஞர்கள், அது போன்று சமூகத்தில் வெவ்வேறு துறையில் பிரகாசிப்பவர்களை ஈடுபடுத்தியுள்ளோம்.

உலகில் இன்று தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடி எமது நாட்டையும் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. இது தொடர்பில் கடந்த 4 மாதங்களாக நாம் கூறிக்கொண்டு வருகிறோம். இந்நிலையில் தேர்தல்களை ஒரே தடவையில் நடத்தாது ஒவ்வொன்றாக நடத்தும் போது பல பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதால் மக்களின் பணம், பொதுச்சொத்துகள் செலவழிக்கப்படுகின்றன. இன்றைய பொருளாதார சூழலில் இது பாரிய நெருக்கடிக்கு இட்டுச் செல்லும். மக்களைப் பாதிக்கும் இவ்வாறான செயல்களுக்கு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். திறமையான மாகாண சபைகளை உருவாக்கினால் எமது நாட்டை கட்டி எழுப்ப முடியும்.

யுத்தம் அற்ற சமாதான நல்லாட்சியை உருவாக்குவதே எமது நோக்கம். ஊடகச் சுதந்திரமின்றி ஊடகங்கள் செயற்படுகின்றன. இதனால் சிறந்த ஊடகவியலாளர்கள் வெளிநாடுளில் சென்று வசிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. சுதந்திரமாக கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் இல்லாமல் உள்ளது. ஆட்சியில் இருக்கும் அரசுக்கே தேர்தல் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்கும் அதிகாரம் உள்ளது. எமக்கு இன்று நியாயமான தேர்தல் கண்காணிப்புக் குழு ஒன்று அவசியமாகிறது. இன்று சில அரச ஊடகங்களால் ஐ.தே.கவிற்கு எதிராக பல பொய்ப்பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இது எமக்கு கவலையை அளிக்கிறது - என்றார்.

மேலும் ஐ.தே.க. தலைமைத்துவத்தில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்து ஊடகவியலாளர்கள் கேட்டபோது அதற்கு பதிலளித்த கருஜெயசூரிய -

இன்று மாலை (நேற்று முன்தினம்) நடைபெறவுள்ள கட்சியின் கூட்டத்தில் இதுகுறித்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் செயலாளர் உபுல் சேனநாயக்க பதவி விலக வேண்டும் எனவும் எஸ்.பி திஸாநாயக்க செயலாளராக வேண்டும் எனவும் பரவலாகப் பேசப்படுகிறது என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில், ஜனநாயக கட்சி உறுப்பினர்களுக்கு தமது கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்க சுதந்திரம் உள்ளது. இது தொடர்பில் கட்சி குழு கூட்டத்தில் விவாதிக்கப்படும். கட்சியில் பிளவு ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல, கட்சியை ஒன்று இணைப்பதே எமது நோக்கம் - எனவும் அவர் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(சி)

## இடம்பெயர்ந்தோருக்கு உதவுதல் தொடர்பான கலந்துரையாடல்

நல்லூர், மார்ச் 20

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எமது உறவுகளுக்கு உதவ வேண்டிய தேவை இருப்பதால் அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்த இந்து அமைப்புக்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

நாளை சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் மேற்படி கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

அரச செயலகத்தாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்படும் உதவிகளுக்கு மேலதிகமான உதவிகள் அவர்களுக்குத் தேவையாக இருப்பதால் அரச அதிபர் ஊடாக இந்த உதவிகளை வழங்க வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், புத்தி ஜீவிகள், பொதுமக்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(203-111)

## அக்கரைப்பற்றில் சுற்றிவளைப்பு புலி உறுப்பினர் சூட்டில் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 20

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்று முன்தினம் முற்பகல் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தில் நபரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சின்னப்பனங்காட்டுப் பகுதியில் இவரின் நடமாட்டம் தொடர்பாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்து அந்தப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டது எனவும் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர் எனக் கருதப்படும் இவரது சடலத்துடன் கைத்துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

(சி

## தென்மராட்சி ஓய்வூதியர் சங்கப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

தென்மராட்சிப் பிரதேச பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கக் கிளையின் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இக்கிளையின் நிர்வாக உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைவதால் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளது.

எனவே அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் மு.காசித்தம்பி அறிவித்துள்ளார்.

(50-207)



பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையுரையாற்றுவதையும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இணையத்தள சேவையை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

# குளிப்பதற்கும், பூங்கன்று வளர்ப்பதற்கும் மக்கள் குடிதண்ணீர் சேவையை பயன்படுத்துகின்றார்கள்

## கவலை தெரிவிக்கின்றார் மாநகர ஆணையாளர்



யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ்ப்பாண மக்கள் சிலர் குழாய் நீர் விநியோகச் சேவையைத் தவறாகப் பயன்படுத்துகின்றார்கள். சிலர் பூங்கன்று வளர்ப்பதற்கும், குளிப்பதற்கும் கூட குழாய் நீரைப் பயன்படுத்துகின்றார்கள் என்று விசனம் தெரிவித்துள்ளார் யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ.

இங்கு இப்போது தோன்றியுள்ள இலவச கலாசாரம் காரணமாகப் மக்கள் எல்லாவற்றையுமே இலவசமாகப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றார்கள். அந்த வகையில் தண்ணீரையும் இலவசமாக வழங்கினால் என்ன என்று கேட்கிறார்கள் என்றார் ஆணையாளர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோகப் புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் 16ஆம் திகதி திங்கட்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ அங்கு உரை நிகழ்த்தினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாநகரசபை தனது எல்லைக்குட்பட்ட நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய சிறிய பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு குழாய் விநியோகத்தின் மூலம் குடிதண்ணீரை வழங்கி வருகின்றது. குறிப்பிட்ட நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவில் நல்ல தண்ணீர் கிணறுகள் இருப்பதால் அந்தப் பகுதிக்கு நீர் விநியோகம் இடம்பெறவில்லை. நீர்விநியோகம் செய்யப்படும் பகுதிகளில் குருநகர்ப் பகுதிகளில் கிணறுகள் இல்லை. இந்த மக்களுக்கு இந்த விநியோகமும் முக்கியமானது.

மக்கள் இந்த குழாய் நீர் விநியோகச் சேவையைத் தவறான முறையில் பயன்படுத்துவது கவலைக்குரியது. பூங்கன்றுகளை வளர்ப்பதற்கும் குளிப்பதற்கும் பயன்படுத்துகின்றார்கள்.

நீர் விநியோகச் சேவைக்காக அதனைப் பயன்படுத்தும் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கான கட்டணமான ரூபா 30 மட்டுமே மாநகரசபை அறவிடுகின்றது. அந்தத் தொகையைக் கட்டுவதற்குக் கூட அநேகர் குறிப்பாக வசதி படைத்தவர்கள் முன்வருவதில்லை. தண்ணீர்தானே அதற்கு ஏன் காசு என்று தொலைபேசியூடாக கடூரத் தொனியில் சிலர் கேட்டதும் உண்டு.

யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீர் குறித்த எதிர்காலம் மிகவும் மோசமாக இருக்கப் போகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்படுகின்றது. எனினும் நாங்கள் அது குறித்து [illegible]

யாழ். மாநாகரசபைக்கான குடிதண்ணீர் விநியோகம் கோண்டாவில், திருநெல்வேலிப் பகுதிகளில் உள்ள கிணறுகளில் இருந்தே வழங்கப்படுகின்றது.

அடிக்கடி நீரிறைப்பதால் இந்தப்பகுதிகளில் உள்ள மக்கள் நீர்த் தேவைகள் குறித்த தமது எதிர்காலம் பாதிக்கப்படலாம் எனக் கருதுகின்றனர். இன்னொரு பகுதியில் இருந்துதான் உங்களுக்கு குடிதண்ணீர்த் தேவையை நாங்கள் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

### 60 வருடம் பழமையான குழாய்கள்

மாநகர குழாய் நீர்விநியோகச் சேவை 60 வருட பழமைவாய்ந்தது. பிரதான விநியோகக் குழாய்களில் கல்சியப் படிவுகள் ஏற்பட்டுள்ளதால் நீரிறைக்கும் போது ஏற்படக்கூடிய நீரின் வேக அழுத்தம் காரணமாக குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டு விநியோகம் தடைப்படும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பிரதான விநியோகக் குழாய் உட்பட ஏனையவைகளிலும் திருத்தம் செய்யவேண்டிய அதாவது புதிய குழாய்களைப் பொருத்த வேண்டியுள்ளது. மாநகரத்தின் குடிதண்ணீர் விநியோகச் சேவையைச் சீர்செய்ய 200கோடி ரூபா வரை தேவைப்படுகின்றது.

மக்களுக்கு நல்ல தண்ணீர் வழங்குவதற்காக மாநகர சபை செலவிட வேண்டிய தொகையையும் தண்ணீருக்காக உங்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு மாநகர கட்டணமாக அறவிடும் பணத்தையும் நோக்கிப் பார்க்கவேண்டும்.

### மக்கள் உதாசீனம்

'நிஷா' அனத்தத்தின் பின் நகரத்தைச் சுத்தமாக்கும் நடவடிக்கைகளுக்காக வாகனம், எரிபொருள் என பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்ட போதும் அரச அதிபரின் முயற்சியுடன் கனரக வாகனங்களைப் பெற்று தேங்கிக் கிடந்த கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட சமயம் பொதுமக்களின் வீடுகளில் காணப்படும் குப்பைகளை மாநகரசபை நேரடியாக எடுத்துக் கொள்ளும் எனவும் வீதிகளில் அவற்றைக் கொட்டவேண்டாம் எனவும் கேட்டிருந்தும் அதுகுறித்து எவருமே கவனத்தில் கொண்டதாக இல்லை. அரச அதிபரும் அரசசார்பற்ற நிறுவனமும் தந்த ஒத்துழைப்பால் அந்தப் பிரச்சினை நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டது.

யாழ். நகருக்கு அண்மையில் வருகை தந்திருந்த ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி யாழ்ப்பாணம் சுத்தமாகவும் அழகாகவும் இருப்பதாகக் கூறி மகிழ்ச்சி தெரிவித்ததாக அரச அதிபர் பெருமைப்பட்டுக் கொண்டார். அந்த மகிழ்ச்சியும் பெருமையும் யாழ்ப்பாண மண்ணில் தொடர்ந்துமிருக்க மக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை மாநகரசபைக்கு வழங்க வேண்டும்.

குடிதண்ணீர் விநியோகச் சேவையில் உள்ள குறைபாடுகள் குறித்தும், நேரமாற்றங்கள் குறித்தும் உங்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டு நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அரியாலை, கொழும்புத்துறை, நாவாந்துறைப் பகுதி மக்களது பிரச்சினைகளுக்கும் இதன்போது தீர்வுகாண ஆர்வமாக உள்ளேன். மாநகரசபையின் செயற்பாடுகள் உரியமுறையில் இடம்பெற மக்கள் அனைவரதும் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

(111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்விச்சாலைக் காட்சிகள்



ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையில் ஆண்டு விழாவும், பரிசில் வழங்கல் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.
இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி மகிந்தினி விஜயகுமார் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் சாறி உடுக்கும் போட்டியில் மாணவிகள் பங்குபற்றியிருப்பதை படத்தில் காணலாம்.



ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆய்வுகூடத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (38)



பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.வின்சென்ற் டிபோல் ஆகியோர் பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜெயநாயகவதி செபமாலை தலைமையில் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (218)

# குமுதினிப் படகில் பயணம் செய்யும் பயணிகளுக்குப் பாதுகாப்பு அங்கிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்20

குமுதினி படகில் பயணம் செய்யும் பயணிகளுக்குப் பாதுகாப்பு மேலங்கிக் கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிகாட்டுவான் துறைக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் இப்படகுச் சேவை இடம்பெற்று வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய இப் படகில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் தற்பாதுகாப்புக்கென இக்கவச அங்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கென நேற்று 200 வரையான தற்காப்புக் கவச அங்கிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-224)

டிஜிற்றல் பிறிண்டிங்
1 சதுர அடிக்கு 150/= மட்டுமே
உங்கள் தேவைகளுக்கு
jasoarts@yahoo.com இற்கு
E மெயில் செய்யுங்கள்
T.P.0718270396,0777110610

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி
நெல்லியடியிலும், யாழ்நகரிலும்.....
Diploma in Computerized Accounting
உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
Quick Book + ACCPAC + MYOB
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்
யாழ்நகரிலும் நெல்லியடியிலும் ஆரம்பம்:
Sat & Sunday
21/03/2009 22/03/2009 11.00 AM
Wed & Friday
25/03/2009 27/03/2009 02.00 PM
Tally Accounting
புதிய பிரிவுகள்
ஆரம்பமாகிறது.
COMPUTER EXPRESS
#167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Science Center Road,
Kodikamam Rd, Nelliyadi
Phone : 021 2228250 / 0777222422

## பெற்றோர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச்20

ஐடியல் அக்கடமியில் முதலாம் தவணைப் பரீட்சையின்தேர்ச்சி அறிக்கை வழங்கலும், பெற்றோர் சந்திப்பும் நாளை மறுதினம் சண்டிலிப்பாயில் உள்ள ஐடியலில் மு.ப. 10 மணிக்கும், யாழ். நீராவியடியில் உள்ள ஐடியலில் பி.ப. 3 மணிக்கும் நடைபெறவுள்ளதாக இயக்குநர் வி. என். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 20

நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள்மு.ப.11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

சுழிபுரம், மார்ச் 20

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மகா சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் நடைபெறவுள்ளது.

நண்பகல் அன்னதானம் நடைபெறும். மாலை அழகிய சித்துப் [illegible] சுவாமி வீதியுலா வருவார்.

(203-28)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 ★ 07 ★ 1930

மறைவு 20 ★ 03 ★ 2008



### அமரர் நல்லார் சின்னத்துரை

பூஜித்த தெய்வம் போனவழி தெரியவில்லை
பொங்கிவரும் கண்ணீருக்கு அணையுமில்லை
தேற்றுவதற்கு இவ்வுலகில் யாருமில்லை
தேம்புகிறோம் தெய்வமே உனை நினைத்து

அம்பாள் வீதி,
மல்வம், உடுவில்.

நினைவுகளுடன்:
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி அருணாசலம்



செருக்கப்புலம், அம்பனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கேணிக்கரை, அளவெட்டியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி அருணாசலம் 11.03.2009 புதன் கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா அருணாசலத்தின் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா சபாபதி (T.A.,வவுனிக்குளம்), செல்லையா தருமலிங்கம்(A.O) ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்லையா கமலம், ஜெயராணி பன்னீச்செல்வம் (பருத்தித்துறை) ஆகியோரின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கேணிக்கரை, அளவெட்டியில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.அருணாசலம் (கணவர்)

கேணிக்கரை,
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆதரவளிக்கும் காங்கிரஸை ஆட்சியிலிருந்து இறக்குவதே எமது நோக்கம்



## அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. சேருமா? பொறுத்திருந்து பாருங்கள் என்கிறார் வைகோ

சென்னை, மார்ச் 20

**இலங்கைப் பிரச்சினை தேர்தலில் முக்கிய பங்கு வகிக்கும். இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் இருந்து இறக்குவதே எங்கள் முதல் நோக்கம் - என்று ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ கூறியுள்ளார்.**

ம.தி.மு.க அரசியல் ஆலோசனை குழு கூட்டம் மற்றும் மாவட்ட செயலர்கள் கூட்டம் கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்கக்கோரி ஐ.நா மன்றத்திற்கும், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாட்டின் குடியரசு தலைவர்களுக்கும் மனுக் கொடுப்பதற்காக லட்சக்கணக்கானவரிடம் கையெழுத்து பெறும் பணி விரைவாக நடந்து வருகிறது. தேர்தல் நெருங்கி கொண்டிருக்கிறது. தேர்தல் பணியைக் கவனிக்க வேண்டிய முக்கிய பொறுப்பு இருந்த போதிலும், இந்தப் பணி சிறப்பான முறையில் நடந்து வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் இருந்து இறக்குவதே எங்கள் முதல் நோக்கம்.

ம.தி.மு.க.வின் கொள்கை பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத் அரசியல் பழி வாங்கும் நோக்கத்தோடு கைது செய்யப்பட்டுள்ளார். இதனை எதிர்த்தும், அவரை விடுதலை செய்யக்கோரியும் நானே நேரடியாக நீதிமன்றில் வாதாடப் போகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைப் பிரச்சினை முன்நிறுத்தப்படும். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணி 40 தொகுதிகளையும் கைப்பற்றி அமோக வெற்றி பெறும் - என்றார்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு வைகோ அளித்த பதில்களும் வருமாறு -

கே - இலங்கைப் பிரச்சினை இந்தத் தேர்தலில் எந்தளவிற்கு மாறுதலை ஏற்படுத்தும்?

ப - இலங்கைப் பிரச்சினை தேர்தலில் முக்கிய பங்கு வகிக்கும்.

கே - உங்களுடன் இலங்கைப் பிரச்சினையில் ஒன்றாக இருந்த திருமாவளவன் தி.மு.க. கூட்டணியில் இணைந்து விட்டாரே?

ப - இதற்குக்கருத்துச் சொல்ல விரும்பவில்லை.

கே - மத்திய அரசு இலங்கைக்கு உதவி செய்தது எனக் கூறுகிறீர்கள், அப்படியானால் மத்திய அமைச்சரவையில் இருக்கும் பா.ம.கவும் இலங்கைக்கு உதவியதா?

ப - மத்தியில் ஆட்சியில் இருப்பவர்கள் காங்கிரஸ்தான். எனவே, அனைத்துக்கும் அவர்களே பொறுப்பு ஆவார்கள்.

கே - மத்தியில் காங்கிரஸை எதிர்ப்பதாகக் கூறினீர்கள், அப்படியானால் பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஆதரவு கொடுப்பீர்களா?

ப - அதைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட வேண்டும்.

கே - பா.ம.க. உங்கள் கூட்டணியில் சேருமா?

ப - இது குறித்து இப்போது கூறமுடியாது. பொறுத்திருந்து பாருங்கள்.

கே - இலங்கைப் பிரச்சினையை மையமாக வைத்துத் தேர்தலில் ஈடுபடும் அனைத்து கட்சியும் தோல்வியடையும் என்று தங்கபாலு கூறியுள்ளாரே?

ப - தங்கபாலு என்று யாராவது அரசியலில் இருக்கிறார்களா? எனக்கு அவரைத் தெரியாது - என்றார்.

# காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம்

## நடிகை நக்மா தெரிவிப்பு



மும்பை, மார்ச் 20

காங்கிரஸ் சார்பில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றாலும் அக்கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வேன் என்று நடிகை நக்மா கூறியுள்ளார்.

மும்பையில் புதன்கிழமை இதுகுறித்து அவர்கூறியவைவருமாறு-

கடந்த 7 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக இருக்கிறேன். எனக்கு மக்களிடம் நல்ல பெயர் இருக்கிறது.

காங்கிரஸில் புதியவர்களுக்கும், பெண்களுக்கும் தேர்தலில் அதிக வாய்ப்பு வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. எனக்கு தேர்தலில் போட்டியிட 'சீட்' தருவது குறித்து கட்சித் தலைமை எடுக்கும் முடிவுப்படி நடப்பேன்.

தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காவிட்டாலும் காங்கிரஸுக்கு ஆதரவாகப் பிரசாரம் மேற்கொள்வேன். வேறு கட்சிக்குத் தாவமாட்டேன் - என்றார்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் அரசு பிள்ளையை கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டியது

## பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் குற்றச்சாட்டு



சென்னை, மார்ச். 20

இலங்கை சுகாதாரத்துறை அமைச்சர் வழங்கிய பேட்டியிலிருந்து, இந்திய அரசு 'பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டியுள்ளது'. - என்று தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் இல.கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

செய்தியாளர்களுக்கு நேற்றுமுன்தினம் பேட்டியளித்தபோதே அவர் இதைக் கூறினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கை சுகாதாரத்துறை அமைச்சர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில், "போர் நடத்துவதற்கு இந்தியா உறுதுணையாக இருந்து உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளும் வழங்கியுள்ளது. இதற்காக நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறியுள்ளார்.

இதிலிருந்து இந்திய அரசு பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டியுள்ளது. இதை நாங்கள் நாடாளுமன்றத்துக்கு எடுத்து செல்ல விரும்புகிறோம்.

மதரீதியான சலுகைகளை காங்கிரஸ் அரசுதான் வழங்கி வருகிறது. உண்மையிலே வகுப்புவாத அரசை காங்கிரஸ் நடத்தி வருகிறது. சலுகைகளை மதத்தின் அடிப்படையில் வழங்காமல் வறுமையின் அடிப்படையில் வழங்க வேண்டும். இதைத் தேர்தல் நேரத்தில் முன் வைப்போம்.

தமிழ்நாட்டில் திருமாவளவனை காங்கிரஸ் எதிர்த்த பிறகும், திருமாவளவன் எங்கள் அணியில்தான் இருக்கிறார் என்று முதல்வர் கருணாநிதி பகிரங்கமாக அறிவிக்கிறார். இதுபற்றி காங்கிரஸ் எதுவும் சொல்லவில்லை. மற்ற மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சிக்கு எந்த மரியாதையும் கிடைக்கவில்லை. 50 ஆண்டுகளாக ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி தற்போது பலவீனப்பட்டு நிற்கிறது.

நாங்கள் இருக்கும் அணியில்தான் பா.ம.க. இருக்கும் என்று திருமாவளவன் சொல்லி வருகிறார். இதன் அடிப்படையில் பா.ம.கவை சிக்க வைக்க வேண்டுமென்றால் விடுதலைச் சிறுத்தைகளைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்து முதல்வர் செயற்பட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் தெளிவான அரசியல் சூழ்நிலை இல்லை. பண்பட்ட அரசியல்வாதிகளைப் பார்க்க முடியவில்லை. ஒரு கட்சி, ஒரே நேரத்தில் 2 பெரிய கட்சிகளுடன் கூட்டணி குறித்து பேசி வருகிறது. இது போன்ற நிகழ்ச்சிகளை பார்க்கும்போது இன்றைய நாளில் அரசியல் தரம் தாழ்ந்து போயுள்ளதோ என்று தோன்றுகிறது.

அப்படியென்றால் யாருடன் கூட்டணி வைத்தாலும் மக்கள் நம்மை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைத்து, மக்களை முட்டாள் ஆக்க பார்க்கிறார்கள். இதுபோன்ற கட்சிகளை மக்கள் புரிந்து கொண்டு தேர்தலில் தக்க பாடம் புகட்ட வேண்டும். சில கட்சிகள் தேர்தல் முடியும் வரை ஒரு அணி, தேர்தல் முடிந்த பிறகு ஒரு அணி என்ற நிலையில் இருக்கிறது - என்றார்.

# தனது கைது குறித்து நாஞ்சில் சம்பத் மறுபரிசீலனை மனு அளிக்கத் திட்டம்



திருப்பூர், மார்ச் 20

தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் தன்னைக் கைது செய்துள்ளமையை மறுபரிசீலனை செய்யும்படி, மாவட்ட ஆட்சியருக்கு மனு அளிக்க நாஞ்சில் சம்பத் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் என அவர் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதனால் நாஞ்சில் சம்பத்தால் ஒரு வருடத்துக்கு பிணையில் வெளிவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர், 12 நாள்களுக்குள் வழக்குப்பதிவை மறுபரிசீலனை செய்யக் கோரி மாவட்ட ஆட்சியருக்கு மனுச் செய்யமுடியும்.

இதையடுத்து, "திருப்பூரில் நடந்த கருத்தரங்கில் இறையாண்மைக்கு எதிராகவும், பிரிவினையை தூண்டும் விதத்திலும் தான் பேசவில்லை. தற்போது தேர்தல் நேரம் என்பதால் ஜனநாயகக் கடமைகள் செய்ய வேண்டும். எனவே தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்திருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என மாவட்ட ஆட்சியருக்கு நாஞ்சில்சம்பத் மனு தயார் செய்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

# இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் இந்தியக் கடற்படையால் கைது!

சென்னை, மார்ச் 20

இந்திய கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்த இலங்கையைச் சேர்ந்த 5 மீனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆந்திர மாநிலம் காக்கிநாடா கடற்பகுதியில் இந்தியக் கடலோர காவல் படையினர் ரோந்து சென்றபோது, இந்திய கடற்பகுதிக்குள் ஊடுருவி மீன்பிடித்துக் கொண்டிருந்த 5 இலங்கை மீனவர்களை அவர்கள் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

விசாரணையில் இவர்கள் சமித் பிரியங்கா (வயது - 36), திலக் (வயது - 34), ஜெய்வால் (வயது - 35), சுனீல் சந்த் (வயது - 24), சுனீல் பிரசன்னா (வயது - 27) ஆகியோர் என்பது தெரிய வந்தது. இவர்களைக் கடலோரக் காவல் படையினர் காசிமேடு மீன்பிடித் துறைமுக பொலிஸாரிடம் செவ்வாய்க்கிழமை இரவு ஒப்படைத்தனர்.

இவர்களுக்குச் சொந்தமான பிளாஸ்டிக் படகையும் பொலிஸார் கைப்பற்றினர் என மேலும் கூறப்பட்டது.

# நீதிமன்றின் தீர்ப்புக்கு அரசு தலைவணங்கும்

## கருணாநிதி தெரிவிப்பு



சென்னை, மார்ச் 20

உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள ஆணையை மதித்து, தமிழக அரசு முறைப்படி உரிய நேரத்தில் செயற்படும் - என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெற்ற உயர் நீதிமன்ற வளாக மோதலையடுத்து, பொலிஸ் அதிகாரிகள் ஏ.கே.விஸ்வநாதன், எம்.ராமசுப்ரமணி ஆகியோரை இடைநீக்கம் செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

பிரச்சினை நடைபெற்ற அன்று மாலையே தலைமை நீதிபதியிடம் (பொறுப்பு) நிலைமையை விளக்க அரசு சார்பில் தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், பொலிஸ் துறை இயக்குநர் ஆகியோரை அனுப்பியதுடன், அமைதியை நிலைநாட்ட, மருத்துவமனையிலிருந்து நேரில் வந்து நீதிபதியைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என பக்ஸ் மூலம் கடிதமும் அனுப்பினேன்.

பின்னர், மோதல் குறித்து விசாரிப்பதற்கு ஸ்ரீகிருஷ்ணா கமிஷனை உச்ச நீதிமன்றம் நியமித்தது. அதன் இடைக்கால அறிக்கையும் உயர் நீதிமன்றத்துக்கும், தமிழக அரசுக்கும் அனுப்பப்பட்டது.

அறிக்கையை சட்டத்தரணிகள் ஏற்காமல் இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ரூபா 25 லட்சத்தை உயர் நீதிமன்றத்தில் அரசு செலுத்தியது.

இந்நிலையில் உயர் நீதிமன்றம் புதன் கிழமை (நேற்றுமுன்தினம்) பிறப்பித்துள்ள ஆணையை மதித்து தமிழக அரசு முறைப்படி உரிய நேரத்தில் செயற்படும். ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் அறிக்கையை ஏற்க முடியாது என்று சட்டத்தரணிகள் சொன்னதைப் போல தமிழக அரசு கூறாமல், நீதிக்குத் தலைவணங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என இரு அதிகாரிகளும் கருதினால் அதற்கு நிவாரணம் தேட வழியும், உரிமையும் அவர்களுக்கு உள்ளன என்பதை நாம் மறுக்க முடியாது. அதே நேரம் உயர் நீதிமன்றத்தின் அறி[illegible] சட்டத்தரணிகள் பணிக்குத் திரும்ப வேண்டும் - என்றுள்ளது.

# தியாகிகளை மதிக்காவிட்டாலும் கொச்சைப்படுத்தக் கூடாது......!

## பழ. நெடுமாறன் ஆதங்கம்



இலங்கைத் தமிழர்களுக்காக 14 பேர் தீக்குளித்து உயிர் நீத்தமைக்கு மத்திய அரசுதான் பொறுப்பாளி. தியாகிகளின் தியாகங்களை மதிக்காவிட்டாலும் கொச்சைப்படுத்தக் கூடாது - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம், தத்தனூர் கீழவெளியில் ஞாயிற்றுக்கிழமை மாலை, இலங்கைத் தமிழருக்காகத் தீக்குளித்து இறந்த பாமக தொண்டர் செ.ராஜசேகரனின் இரங்கல் கூட்டத்தில் பேசியபோதே இவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தியாகிகளின் தியாகங்களை மதிக்காவிட்டாலும் கொச்சைப்படுத்தக்கூடாது. தமிழகத்தில் 5 நாள்களுக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார். இவர்கள் 14 பேரின் உயிரிழப்புக்கும் பொறுப்பாளி மத்திய அரசுதான். இதன் விளைவு வரும் மக்களவைத் தேர்தலில் உணர்த்தப்படும்.

ராஜசேகரனின் மரணம் ஈடுசெய்ய முடியாததுதான் என்றாலும், அவரது குடும்பச் சூழல் கருதி சிறு உதவியாக இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் அவரது குடும்பத்தினருக்கு ரூபா 3 லட்சம் விரைவில் வழங்கப்படும் - என்றார்.

பா.ம.க. தலைவர் கோ.க. மணி பேசியவை வருமாறு -

முத்துக்குமார் தொடங்கி ராஜசேகரன் வரை தீக்குளித்து உயிரிழந்தவர்களின் நோக்கங்கள் நிறைவேறும் வரை வீரமுள்ள, மானமுள்ள தமிழர்கள் தொடர்ந்து போராட வேண்டும் - என்றார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பேசியவை வருமாறு -

இவையெல்லாம் சகித்துக் கொள்ள முடியாத கொடுமை என்றாலும்கூட, தீயில் வெந்து சாக வேண்டும் என்று அவர்கள் எடுத்த முடிவு, அவர்களது மன வேதனையின் உச்சத்தைக் காட்டுகிறது - என்றார் திருமாவளவன்.

இறுதியில் ராஜசேகர் உடல் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

# சென்னை உயர்நீதிமன்றச் சம்பவம்: 2 பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம்

## நீதிமன்றம் உத்தரவு

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் பெப்ரவரி மாதம் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு கூடுதல் பொலிஸ் ஆணையர் விஸ்வநாதன் மற்றும் இணை ஆணையர் ராமசுப்பிரமணியன் ஆகியோருக்கே முக்கிய பொறுப்பென்று கூறி, அவர்கள் இருவரையும் தற்காலிக பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

பல்வேறு தரப்பிலிருந்து வேண்டுகோள்கள், உச்சநீதிமன்ற அறிவுறுத்தல் போன்றவற்றிற்கு செவிசாய்க்க மறுத்து தங்களைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்வரை தங்களது போராட்டம் தொடரும் என்று [illegible] நீதிமன்றங்களைப் புறக்கணித்து வந்த சட்டத்தரணிகள் இன்றைய இடைக்காலத் தீர்ப்பினை தங்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகக் கொண்டாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கொமர்ஷல் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெற்ற - அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் - சிறுவர்கள் நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

கிளை முகாமையாளர் வீ.மதியூகரன் உரையாற்றுவதையும் மாசீன்கூடல் ஆர்.சி.ரி.எம்.பாடசாலை மாணவன் சியாசினுக்கு பரிசில் வழங்குவதையும் முதலிரு படங்களிலும்-

வங்கி உத்தியோகத்தர் எம்.மயூரன் மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை மாணவன் திருக்குமாருக்கும் வங்கி உத்தியோகத்தர் திருமதி சி.ஜெயபாலன் கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலய மாணவன் கம் சனுக்கும் வங்கி உத்தியோகத்தர் என்.நவக்குமார் கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மாணவி நிலுக்ஷிகாவுக்கும் பரிசில் வழங்குவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்-

நிகழ்வில் கலந்துகொண்டவர்களை கடைசிப் படத்தில் காணப்படுகின்றனர். (படங்கள்: லக்ஸ்மன்)

## யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையின் பூர்வாங்கப் பணிகள் 23 ஆம் திகதி ஆரம்பம்

### ஜனாதிபதி மஹிந்த ஆரம்பித்து வைப்பார்

கொழும்பு, மார்ச் 20

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான பூர்வாங்கப் பணிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பித்துவைக்கவுள்ளார். வடக்கிற்கான ரயில்சேவை ஆரம்பிப்பதற்கான தேசிய செயலகமொன்றை அன்றைய தினம் ஜனாதிபதி திறந்து வைப்பார்.

யாழ்.தேவி சேவையை ஆரம்பிப்பதற்கென தேசிய மட்டத்தில் சகல மக்களினதும் பங்களிப்பு பெறப்பட உள்ளதோடு இதனூடாக யாழ்ப்பாணம் வரையான 37 ரயில் நிலையங்கள் மீளமைக்கப்படவுள்ளன.

இந்தப் பூர்வாங்கப் பணிகள் நேற்று வியாழக்கிழமை இடம்பெற இருந்த போதும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டதாக போக்குவரத்து அமைச்சு தெரிவிக்கின்றது. (50)

## இலங்கை நிர்வாகசேவை பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கை நிர்வாக சேவை பரீட்சைக்கு தோற்றுவதற்கான பயிற்சி வகுப்பொன்று நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை புற்றளை மகாவித்தியாலயத்தில் காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறவுள்ள இப் பயிற்சி வகுப்பில் நிர்வாக சேவை அதிகாரியான ந.தெய்வேந்திரன் வளவாளராக கலந்து கொள்வார். எனவே இலங்கை நிர்வாகசேவை பரீட்சைக்குத் தோற்றுவோர் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4)


மேன்மையுற வாழ்த்துகிறோம்



தேவரையாளி இந்துவின்
மாணவனாய்,
ஓட்ட வீரனாய்,
உதைபந்தாட்ட வீரனாய்
பல்கலைக்கழகம் சென்ற
பட்டதாரியாய் - இன்று
அதிபராய்
உயர்வடைந்து நிற்கும்
மணியே வாழி!

உயர்திரு.மா.நவநீதமணி B.A.
(அதிபர், தேவரையாளி இந்துக் கல்லூரி)

அல்வாய் நண்பர்கள் வி.கழகம்,
இ.குகதாஸ் குடும்பத்தினர்,
க.இரவீந்திரன் (ஆசிரியர்) குடும்பத்தினர்,
செ.மகாதேவன் குடும்பத்தினர், ஜெ.சுபாகு
குடும்பத்தினர், சி.நீதிராஜா குடும்பத்தினர்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.
(83655)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை
அபிவிருத்திச்சபை

பொதுக்கூட்டத்திற்கான அழைப்பு

இடம்: சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மண்டபம்
காலம்: 05.04.2009 ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 10 மணி
தலைவர்: திரு.மு.நாகேந்திரராசா

பொதுச்சபை உறுப்பினர்கள், நலன்விரும்பிகள்
அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

Dr.செ.அம்பிகைபாகன்
செயலாளர்,
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை,
அபிவிருத்திச்சபை.
சாவகச்சேரி. (A/557574)


# தவக்காலச் சிந்தனை



## மனந்திரும்பல் தவக்காலத்தில் மட்டுமா?

தவக்காலம் என்பது மனந்திரும்புதலின் காலம் என சில கிறிஸ்தவ விசுவாசிகள் கூறுவதுண்டு. ஆனால் வானக தந்தையாம் இறைவன் ''உங்கள் தீச்செயலை என் திருமுன்னின்று அகற்றுங்கள்'' (எசா 1:16) என்று கூறுகிறார். ஆகவே கிறிஸ்தவ சமூகத்திலே வாழுகின்ற நாம் எக்காலத்திலும் மனம் திருந்தியவர்களாகவே வாழ வேண்டும். மனம் திரும்புதல் என்பது மனம் மாற்றம், இதய மாற்றம், வாழ்க்கை மாற் றம் ஆகிய மூன்று நிலைக்குள் உள்ளதை வேதாகமம் எமக்கு கற்பிக்கின்றது.

மன மாற்றம் என்பது நாம் செய்த தவறுகளை மனதார ஏற்றுக்கொள்வதாகும். காணாமல் போன மகன் உவமையில் அந்த ஊதாரியான மகனுக்கு அறிவுத்தெளிவு ஏற்பட்ட போது ''அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்.'' (லூக் 15:18) என்று கூறுகின்றான். இது தான் மனமாற்றம்.

இதய மாற்றம் என்பது நாம் பாவங்களுக்காக உண்மையில் மனம் வருந்துவதாகும். இறைமகன் இயேசுவை மும்முறை மறுதலித்த அவரது சீடரான பேதுருவை இறைமகன் இயேசு திரும்பிப் பார்த்தபோது ''பேதுரு வெளியே சென்று மனம் நொந்து அழுதார்'' (லூக் 22:62) வாழ் நாள் பூராவும் அதை எண்ணி எண்ணி அழுதார். இது தான் இதய மாற்றம்.

வாழ்க்கை மாற்றம் என்பது நாம் செய்த தவறுகளை மீண்டும் செய்யாமல் இருப்பதுடன் புது வாழ்வை தொடங்குவதேயாகும். பணத்தாசை பிடித்தவனும், வரி தண்டுபவர்களின் தலைவருமாகிய சக்கேயு ''ஆண்டவரே என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகின்றேன். எவர் மீதாவது பொய் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகின்றேன். (லூக் 19:5) என்றான். இது தான் வாழ்கை மாற்றம்.

மேற்கூறிய மூன்று மாற்றங்களையும் நாம் பெற்று வாழ்கின்ற போது இறைமகன் இயேசுவின் அன்பிற்கு உட்பட்டவர்களாக வாழ முடியும். ஆகவே நாமும் தாவீதைப் போன்று ''கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள் படைத்தருளும். உறுதி தரும் ஆவியை புதுப்பிக்கும் ஆவியை என்னுள் உருவாக்கியருளும் (தி.பா 51:10) என்று மன்றாடி புதுப்படைப்பாக வாழ்வோமாக.

க.அருள்நேசன், குருநகர்.


திருமண சேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1980ஆம் ஆண்டு, கார்த்திகை முதலாம் பாதம், கிரகபாவம் 30, சுவிஸில் குடியுரிமையுடைய Pharmacy உரிமையாளருக்கு படித்த, ஓரளவு ஆங்கில அறிவுள்ள, அழகிய மணமகள் தேவை. மணமகன் பெற்றோர், சகோதரர்களுடன் மிக விரைவில் கொழும்பு வரவுள்ளார். மற்றும் 1977 ஆம் ஆண்டு, ஆயிலியம் 2ஆம் பாதம், கிரகபாவம் 38½ இத்தாலியில் குடியுரிமையுள்ள Book shop உரிமையாளருக்கு மெல்லிய அழகிய மணமகள் தேவை. மணமகன் தற் போது இந்தியா வந்துள்ளார். உடனடி தொடர்புகளுக்கு:
லண்டன் T.P.0044 7965028396
(இராஜேஸ்)
077 6184434, 077 4047531, 077 8501013
E.mail: vaniimb@yahoo.com



மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 79 ஆம் ஆண்டு பிறந்த, பூராடம் 12 இல் செவ்வாய், கிரகபாவம் 60 உடைய M.B.B.S Doctor (F.R.C.S) ஐரோப்பிய நாட்டுப் பிரஜா உரிமை உடைய மணமகனுக்கு [illegible] பெற்றோர் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் தேடுகின்றனர்.
தொடர்பு:T.P. 021 222 7723


## வலி.மேற்கில் சனியன்று பெண்கள் விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 20

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தி வரும் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளை பாதுகாத்தலும் சட்டரீதியான நடைவடிக்கை மேற்கொள்வதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை வலி.மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சட்டத்தரணி மு.றெமிடியஸ், வலி. மேற்குப் பிரதேசசபை செயலாளர் சி.புத்திரசிகாமணி, செல்வி இ.நாகரூபினி ஆகியோர் வளவியலாளராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (1-9)

## உள்ளூராட்சி மறுசீரமைப்பு கலந்துரையாடல் செவ்வாய்

யாழ்ப்பாணம், மார்ச் 20

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு நகரசபை கேட்போர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யா.நக்கீரன் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல் பற்றி உரையாற்றவுள்ளார்.

இக் கலந்துரையாடலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (1-207)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொதுமக்களைப் பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கையில் செஞ்சிலுவைக் குழு இறங்காது!

## இலங்கைக்கான தலைவர் கஸ்டெலா சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 20

வன்னியில் காணப்படும் நிலைமை மேலும் மோசமடையலாம் என எச்சரித்துள்ள செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான தலைவர் போல் கஸ்டெலா, தமது அமைப்புபொதுமக்களைப் பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கைகள் எவற்றிலும் இணைந்து கொள்ளாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் என்.டி.பி.வி. இணையத்தளத்திற்கு அளித்துள்ள பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்திய மருத்துவக்குழு தம்முடன் இணைந்து பணியாற்றாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறிள்ளவை வருமாறு:-

''மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள நிலைமை மிகுந்த அச்சமடையச் செய்கிறது. மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் குறித்து நான் கவலையடைகிறேன்.

**பொதுமக்களின் நிலைமையை இருதரப்புகளும் புரிந்துகொள்ள வேண்டும்**

அகதிகள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இரு தரப்பும் பொதுமக்களின் நிலையைப் புரிந்துகொள்ளவேண்டும்.

பொதுமக்களை வெளியேற்றும் திட்டம் குறித்து இருதரப்புடனும் நான் பேச்சுகளை மேற்கொண்டுள்ளேன்.

மக்களைப் பலவந்தமாக வெளியேற்றும் திட்டம் எதிலும் செஞ்சிலுவைக் குழு இணைந்துகொள்ளாது. இவ்வாறான திட்டம் குறித்து நான் எதுவும் அறியவில்லை. மோதல் நடைபெறும் வேளையில் அங்கு பணியாற்றுவது மிகவும் கடினமானது. எனினும், இரு தரப்புகளுடனும் நாம் பேச்சுகளை மேற்கொண்டுள்ளோம். இதனை நடுநிலையோடு விளங்கிக் கொள்ளவதற்கான அவசியமுள்ளது. எனினும் சில சமயங்களில் இருதரப்புடனும் பேசுவதே கடினமாகவுள்ளது.

**வைத்திய நிலையங்கள் பாடசாலைகளில்**

போதியளவு மருத்துவப் பணியாளர்கள் மற்றும் போதிய மருத்துவ நிலையங்கள் அங்கு இல்லாமையால் காயமுற்றவர்களுக்கு சிகிச்சையளிப் பதற்கான வசதிகள் போதுமானவையாகஇருக்கவில்லை.



வைத்திய நிலையங்கள் பாடசாலைகளிலேயே இயங்குகின்றன. தேவைகேற்ப மருத்துவ விநியோகம் இடம்பெற வேண்டும். எனினும் அவற்றில் தாமத நிலை நிலவுகிறது - என்றார் அவர்.

(அ-சி)

## கச்சதீவை புனித பிரதேசமாக்க அரசு திட்டம் என்கிறார் அமைச்சர்

கச்சதீவைப் புனிதப் பிரதேசமாக்கி அதனை சமய வழிபாட்டுத் தலமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேமசிறி மானகே கச்சதீவு தொடர்பான கேள்வி ஒன்றையெழுப்பிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

'' கச்சதீவு இலங்கைக்கே சொந்தம் என்கிற போதிலும் அங்கு எமது நாட்டிற்குரிய எந்தவொரு ஆதாரங்களும் இல்லை. அரச கட்டடங்கள் கூட இல்லை'' என்று ஜே.வி.பியின் எம்.பி. பேமசிறி மானகே குற்றஞ்சாட்டினார்.

அங்கு கடற்படைக்கான கட்டடங்களை யாவது அமைக்கவில்லை என்றும் பேமசிறி தெரிவித்தார். அப்போது பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, ''கச்சதீவு இலங்கைக்கே சொந்தம். அதனை எவரும் உரிமை கொண்டாட முடியாது. அந்தப் பிரதேசத் தைப்புனித பிரதேசமாக்கி, அதனை மதவழிபாட்டுக்குரிய இடமாக்குவதற்கு அரசு நட வடிக்கை எடுத்து வருகிறது'' என்று தெரி வித்தார்.(அ-சி)

# தமிழருக்கு அதிகாரப்பகிர்வு வழங்கினால் தேசியப் பிரச்சினை மேலும் உக்கிரமடையும்

## எச்சரிக்கிறார் ஜே.வி.பியின் பேமசிறி மானகே



கொழும்பு,மார்ச்20

, தமிழர்களுக்கு ஜனநாயகம் மற்றும் சம உரிமை போன்றவற்றைப் பெற்றுக் கொடுக்காது அவர்களுக்கு · சுயாட்சி, அதிகாரப் பகிர்வு போன்றவற்றை வழங்கினால் தேசிய பிரச்சினை மேலும் உக்கிரமடையும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தம் மூலம் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் அதேவேளை, அதிகாரப்பகிர்வு யோசனையை முற்றாகக் கைவிட வேண்டும் என்றும் அக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற படையினரின் மனைவிமார் (விதவைகள்) ஓய்வூதியச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் எம்.பி. பேமசிறி மானகேயே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டை ஆட்சி செய்த ஒவ்வொரு அரசுகளும் புலிகளின் பிரிவினைவாதத்திற்குத் துணை போயின. அதற்குச் சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்தன.

சந்திரிகாவின் ஆட்சியில் புலிகளின் பிரிவினைவாதத்தை ஏற்று அரசின் தீர்வுத் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. தனிநாட்டுக் கோரிக்கை ஏற்பட்டது.

**புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்று அன்றே கூறியவர்கள் நாங்கள்**

அதனைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். புலிகளுக்குத் தனி நிலப்பரப்பு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அதற்கு சர்வதேச அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

புலிகளை யுத்தம் மூலம் தோற்கடிக்க முடியாது என்று சிலர் அன்று கூறினர். அவ்வாறு கூறியவர்கள்தான் இன்று மஹிந்தவுடன் இணைந்து யுத்தத்திற்கு ஆதரவாகப் பேசுகின்றனர்.

புலிகளை யுத்தத்தால் தோற்கடிக்க முடியும் என்று நாம் அன்றிலிருந்து கூறிவந்தோம். அது உண்மையாகிவிட்டது. இப்போது புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்படும் நிலையில் உள்ளனர்.

ஆனால், இந்த நிலையிலும் கூட, தமிழீழம், அதிகாரப்பகிர்வு போன்றவை பற்றிப் பேசப்படுகின்றது. இதை நாம் மிகக் கடுமையாக எதிர்க்கின்றோம்.

புலிகள் யுத்தம் மூலம் தோற்கடிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு ஜனநாயகம், சம உரிமை போன்றவை வழங்கப்படல் வேண்டும்.

ஆனால், தமிழீழம், அதிகாரப்பகிர்வு போன்றவை வழங்கினால் தேசியப் பிரச்சினை மேலும் உக்கிரமடையும். ஆகவே, ஜனாதிபதி இந்தத் திட்டங்களைத் தோற்கடிக்க வேண்டும் - என்றார்.

(அ-சி)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 20

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் சின்னஞ்சூட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முருகேசு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். யாழ். வலய அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர்.

(2-4)

# பாக். பழங்குடி மக்களின் பகுதிக்கு அப்பாலும் ஏவுகணைத் தாக்குதலை நடத்த அமெ. திட்டம்

## ஒபாமா நிர்வாகம் பரிசீலனை செய்கிறதாம்

நியூயோர்க்,மார்ச் 20

பாகிஸ்தானில் பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் தற்போது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திவரும் அமெரிக்கா அப்பகுதிக்கு அப்பாலும் தமது தாக்குதல்களை நடத்தலாம். இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி பரிசீலித்து வருகிறார் என பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானில் தலிபான் தீவிரவாதிகளை, ஒடுக்க முடியாமல் போனமைக்குக் காரணம், அவர்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் ஊடுருவி, தலைமறைவாக இருந்து வருவதுதான் என இவ்வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

ஆப்கானிலிருந்து வெளியேறியுள்ள தலிபான், அல்-குவைதா தீவிரவாதிகள், பாகிஸ்தானின் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ளார்கள். அங்கிருந்தவாறே அடிக்கடி ஆப்கானுக்குள் நுழைந்து தாக்குதல்களை நடத்திவிட்டு, மீள பாகிஸ்தானுக்குள் ஓடி அவர்கள் தப்பி விடுகிறார்கள் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்துள்ள தீவிரவாதிகளை ஒடுக்குமாறு அவ்வப்போது அமெரிக்கா பாகிஸ்தானை வலியுறுத்தி வந்துள்ளது. எனினும், அதற்குப் பாகிஸ்தான் போதிய அளவில் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஒத்துழைப்பு கிடைக்காமையால், நேரடி நடவடிக்கையில் ஈடுபட அமெரிக்கா முனைந்தது. அதனால் அமெரிக்கா தீவிரவாதிகள் பதுங்கியுள்ள பகுதிகளில் ஆளில்லா விமானங்கள் மூலமாக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திவருகின்றது. தாக்குதல்களுக்கான பகுதியும் விஸ்தரிக்கப்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அது விளக்கியுள்ளது.

சமீபத்தில் பாகிஸ்தான் குறித்த 2 உயர்மட்ட அறிக்கைகள் அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டன. இந்த அறிக்கைகளில், அமெரிக்கத் தாக்குதலைத் தொடர்ந்து சில அல்-குவைதா, தலிபான் தலைவர்கள் பழங்குடியினப் பகுதியை காலி செய்துவிட்டு குவெட்டா நகரில் குடியேறிவிட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலுசிஸ்தான் தலைநகர் குவெட்டா நகரில் தான் இப்போது அதிக அளவில் தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர். அங்கு அவர்கள் நடமாட்டமும், செல்வாக்கும் அதிக அளவில் உள்ளன.இதனால், இந்த பகுதியில் விமானத் தாக்குதல் நடத்தவேண்டும் என்றும் அவற்றில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதனால், தாக்குதல் நடத்தும் பகுதியை விஸ்தரிக்கலாமா என்பது குறித்து ஜனாதிபதி ஒபாமா பரிசீலித்து வருகிறார். பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியை கடந்து பலுசிஸ்தான் பகுதி மீது தாக்குதல் நடத்தலாமா என்பது பற்றியும் அவர் பரிசீலித்து வருகிறார் என அமெரிக்க பாதுகாப்பு வட்டாரத் தகவல் தெரிவித்துள்ளது.

அப்படி அமெரிக்கா தாக்குதல் பகுதியை விரிவுபடுத்தினால், பாகிஸ்தானில் பதற்றம் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

## நடிகை நடாஷா மரணம்



நியூயோர்க், மார்ச்20

பனிச் சறுக்கு விளையாட்டில் தவறி விழுந்து படுகாயமடைந்த பிரபல இங்கிலாந்து நடிகை நடாஷா ரிச்சர்ட்சன் நேற்று வியாழக்கிழமை நியூயோர்க்கில் மரணமடைந்தார். இவருக்கு வயது 45.

நடிகை நடாஷா, சுற்றுலா பயணமொன்றை மேற்கொண்டு கனடா சென்றடைந்தார். அங்குள்ள பொது பூங்கா வுக்குச் சென்ற இவர் பனிச் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டார். அப்போது தவறி விழுந்தமையால் தலையில் பலத்த காயம் ஏற் பட்டது.

தாங்க முடியாத வலியால் துடித்த நடிகை நடாஷா உடனடியாக கனடா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டு, அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இவரது கணவர் நீசனம் வைத்தியசாலையில் இருந்து இவரைக் கவனித்து வந்தார். நீசனும் பிரபல நடிகராவார். எனினும், சிகிச்சை பலனளிக்காமல் நேற்று வியாழக்கிழமை மரணமடைந்தார்.

நடிகை நடாஷாவின் தந்தை டோனியும் பிரபல சினிமா இயக்குநராவார். அவர் 1991 ஆம் ஆண்டு மரணமடைந்துவிட்டார்.

# மும்பை தாக்குதல்: பாகிஸ்தானின் கேள்விகளுக்கு இந்தியா அளித்த பதில் திருப்தி தரவில்லையாம்

இஸ்லாமாபாத், மார்ச் 20

மும்பைத் தாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்டுவரும் புலனாய்வுக்கு உதவும் பொருட்டு கேட்கப்பட்ட 30 கேள்விகளுக்கான இந்தியாவின் பதில்கள் திருப்தியளிக்கவில்லை என பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் 'தி டான்' நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில், '' நாங்கள் கேட்ட 30 கேள்விகளுக்கான பதில்கள் அடங்கிய கோப்பை இந்தியா அளித்துள்ளது. ஆனால், அவற்றில் உள்ள தகவல்கள் போதுமானவையாக இல்லை. அக்கோப்பு 400 பக்கங்களைக் கொண்டது'' எனக் கூறியுள்ளார்.

''இந்த 30 கேள்விகள் தவிர பயங்கரவாத எதிர்ப்புப் படையின் தலைவர் ஹேமந்த கார்கரே பயணித்த காரை ஓட்டிய காவலரின் சாட்சியம், குஜராத்திலுள்ள வைர வியாபாரிக்கும், பாகிஸ்தானிலுள்ள இந்துக்களுக்கும் உள்ள தொடர்பு என பாகிஸ்தான் எழுப்பிய 2 கூடுதல் கேள்விகளுக்கு இந்தியா பதிலளிக்கவில்லை'' என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியா அனுப்பிய 30 கேள்விகளுக்கான பதில்கள் அடங்கிய கோப்பை மும்பைத் தாக்குதல் பற்றி புலனாய்வு நடத்திவரும் பாகிஸ்தான் உளவு அமைப்பிடம் (எவ்.ஐ.ஏ.) உள்துறை அமைச்சகம் புதன்கிழமை ஒப்படைத்துள்ளது.

மும்பைத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ள லஷ்கர்-ஈ-தொய்பா தளபதி ரெஹ்மான் லாக்வி ஆகியோர் உட்பட 4 தீவிரவாதிகள் மீதான வழக்கில் இந்தியாவின் பதில்கள் அடங்கிய கோப்பை சேர்க்கவும் பாகிஸ்தான் அதிகாரிகள் முடிவு செய்துள்ளார்கள் எனக் கூறப்படுகிறது.

# பாக். சிறையிலுள்ள தமது உறுப்பினர்களை விடுதலை செய்யக் கோருகிறது தலிபான்

பாகிஸ்தான் சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை, அமைதி உடன்படிக்கைக்கிணங்க விடுதலை செய்யுமாறு, பாகிஸ்தான் அரசை தலிபான் அமைப்பினர் கோரியுள்ளனர்.

பாகிஸ்தானின் ஸ்வாத் பள்ளத்தாக்கில் செயற்பட்டுவரும் தலிபான் அமைப்புக்கும், பாகிஸ்தான் அரசுக்குமிடையிலான இந்த அமைதி உடன்படிக்கை, கடந்த மாதம் எட்டப்பட்டு, கைச்சாத்தானமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானிலுள்ள பல்வேறு சிறைக் கூடங்களில், தலிபான் தீவிரவாதிகளில் 210 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இதற்கு பரஸ்பர புரிந் துணர்வு அமைதி உடன்படிக்கையில் இட முண்டு என்றும் பாகிஸ்தான் அரசுக்கு இந்த அமைப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்றைய விமான மற்றும் ஷெல் தாக்குதல்களில் படுகாயமுற்றவர்கள் பாடசாலைகளில் இயங்கும் வைத்திய நிலையங்களில் தரையில் அனுமதிக்கப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரத்தை மீண்டும் பாகாப்புச் சபையில் ஆராய்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு இருந்தனர்.

''மற்றும் அலுவல்கள்'' என்ற தலைப்பில் இலங்கை விவகாரத்தை கவனயீர்ப்பு விடயமாக நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்கான முன் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

இலங்கை விவகாரம் பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாமையால் அதற்கு முன்னோடியாக 'மற்றும் அலுவல்கள்' என்ற அட்டவணையில் சேர்ப்பதற்கு மற்றும் பல நாடுகளும் ஆதரிக்க விருப்பம் தெரிவித்திருந்தன என்று அறியப்படுகிறது.

ஆனால், இலங்கையில் சிவிலியன் சா் சம்பந்தப்பட்ட நிலைமை குறித்து ஆராய்வதை மிகக் கடுமையாகத் தான் எதிர்ப்பதாக சீனா அறிவித்திக்கிறது.

''இலங்கையில் நடைபெறுவது வெறும் உள்நாட்டு விடயம்''. அதனால் சா்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை. எனவே அந்த நாட்டின் விவகாரத்தை பாதுகாப்புச் சபையில் எந்த வடிவத்திலும் ஆராயவேண்டியதில்லை - என்று சீனா நேற்றுக் கருத்து வெளியிட்டது.

இதே வாதத்தை முன்வைக்குமாறு பாதுகாப்புக் கவுன்ஸிலில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய நாடுகளிடம் ஐ.நாவில் உள்ள இலங்கை அதிகாரிகள் ஆதரவு திரட்டி வருகின்றனர்.

எனினும் இது விடயத்தில் ஏனைய நிரந்தர அங்கத்தவா்களின் நிலையைப் பொறுத்தே தீா்க்கமான முடிவு இன்று 20 ஆம் திகதி தெரிய வரும் என்று கூறப்பட்டது.(அ)

## திருமலைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் வெளியாகியுள்ளன.

உப்புவெளிப் பகுதியில் தங்களது ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை அடையாளம் காட்டுவதாகக் கூறியதையடுத்து பொலிஸாா் இவரை அங்கு அழைத்துச் சென்ற போது அங்கு இரண்டு கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும், அந்தச் சமயம் இவா் சயனைட் உட்கொண்டாா் எனவும் பொலிஸ் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

சயனைட் உட்கொண்ட நிலையில் திருமலை வைத்தியசாலையில் இவா் சோ்க்கப்பட்ட போதிலும் பின்னா் உயிரிழந்தாா். இச்சி[illegible]யின் கொலை தொடா்பாக சந்தேகத்தின் பேரில் 6 போ் கைதான போதிலும் பிரதான சந்தேக நபா் ஏற்கனவே பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருந்தாா்.

சயனைட் உட்கொண்டு மரணமானவா் நபா் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடன் தொடா்புடையவா் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது என பொலிஸ் தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் இந் நபருக்கும் தமக்கும் தொடா்பில்லை என்று அக்கட்சி அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-சி)

(மற்றொரு செய்தி 02 ஆம் பக்கத்தில்)

## அரசைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாகத்தை நாம் மிகவும் மதிக்கின்றோம்.

இன்னும் சில தினங்களில் பயங்கரவாதத்தை இந்த நாட்டில் இருந்து முற்றாக ஒழித்துக்கட்ட முடியும். அப்படியானதொரு நிலைமையை எமது படையினா் உருவாக்கியுள்ளனா்.

தமிழ் மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் தப்பி வரும்போது மக்கள் மீது புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்துகின்றனா்.

### நாம் மக்களை ஒரு போதும் தாக்கவில்லை

சில அமைப்புகள் மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்றன. ஆனால் இந்தச் சம்பவம் குறித்து எந்த மனித உரிமை அமைப்புகளும் சா்வதேச சமூகமும் ஒன்றும் பேசவில்லை.

ஆனால், எம்மை மட்டும் சிவிலியன்களுக்கு ஆபத்து ஏற்படாமல் யுத்தம் செய்யுமாறு அந்த அமைப்புகள் கேட்கின்றன.

நாம் சிவிலியன்களுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாதவகையிலேயே யுத்தத்தை நடத்துகின்றோம். நாம் மக்களைப் பற்றிக் கவனிக்காமல் யுத்தம் செய்திருந்தால் இப்போது மக்களை முற்றாக மீட்டு பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்டியிருப்போம்.

நாம் மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளமையால்தான் இந்த யுத்தம் முடிவடைய சற்றுத் தாமதமாகிறது. நாம் ஒருபோதும் மக்களை தாக்கிக்கொல்லவில்லை. அவா்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்குகின்றோம்.

இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அந்தப் பகுதி மக்களுக்கு முழுமையான ஜனநாயகத்தை வழங்குவதே எமது திட்டம். உள்ளூராட்சி சபைகள், மாகாணசபைகள் போன்றவற்றின் ஊடாக தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய அம்மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

அதேபோல் வடக்கில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படும். இவ்வாறு எமது மக்களுக்கு நாம் சம உரிமையை வழங்குவோம் - என்றாா். (அ-சி)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக அமைந்துள்ளனஎன்றும் அந்த இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிபிடப்பட்டுள்ளவை வருமாறு:-

திருகோணமலை புல்மோட்டையில் அமைக்கப்பட்டுள்ள இந்திய மருத்துவமனைக்கு கடந்த வெள்ளிக்கிழமை 140 தமிழ் பொது மக்கள் கொண்டுவரப்பட்டுள்ளனா். இவா்கள் அனைவருக்கும் உடனடியாக சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நிலை காணப்பட்டது.

இந்நிலையில் இதற்கென தற்போதுள்ளதைவிட அதிக எண்ணிக்கையான மருத்துவா்கள், பணியாளா்கள் தேவையென இந்தியா கருதுகின்றது. பொதுமக்களின் நிலை ஒன்றரை மாதங்களுக்கு முன்னா் இருந்தமையை விட மிகவும் மோசமடைந் துள்ளது எனப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

மோதல் நடைபெறும் பகுதிகளில் காணப்படும் மனிதாபிமான நிலை குறித்து இந்தியா மிகவும் கவலையடைந்துள்ளது என்றும் உயா் அதிகாரி ஒருவா் தெரிவித்துள்ளாா். விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் பாதுகாப்பு வலயத்தை மதிக்க வேண்டும். எனினும் எவரும் இதனைச் செய்வதில்லை என இந்தியா மதிப்பிட்டுள்ளது.

மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு மேலும் அதிகளவான உணவை அனுமதிக்குமாறு புதுடில்லி கொழும்பை வலியுறுத்தி வருகின்றது.

மேலும் அரசியல் தீா்வைக் காணும் விடயத்தில் போதிய முன்னேற்றமின்மை குறித்தும் இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

இந்தியா எதிா்பாா்த்ததை விட அரசியல் தீா்வுப் பொதியை வைப்பதற்கு அதிக காலம் பிடிக்கிறது என்ற கருத்தும் புதுடில்லியில் காணப்படுகின்றது. (அ-சி)

## மோதல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான தலைவி அன்னமரி லூவ் தெரிவித்துள்ளாா்.

இந்த மோதல்களில் நூற்றுக்கணக்கான சிறாா்கள் உட்பட சுமாா் 2,000 பொதுமக்கள் இறந்துபோயுள்ளனா் என ஐக்கிய நாடுகள் சபை கூறிய சில நாள்களின் பின்னா் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த விடயம் தொடா்பில் மேலும் அன்னமரி லூப் தெரிவித்துள்ளவை வருமாறு -

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையில் நடக்கின்ற மிகவும் கொடூரமான சண்டைகளில் பொது மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனா்.

நான்கு மாதங்களாக ஒரு பதுங்குகுழியில் தனது குழந்தையுடன் ஒளிந்திருந்த ஒரு தாயை எம்.எஸ்.எவ். மருத்துவா்கள் பாா்த்திருக்கிறாா்கள்.

மற்றொரு பெண்ணின் இரு குழந்தைகள் முதலில் ஷெல் வீச்சில் உயிரிழந்திருக்கிறாா்கள். பின்னா் அந்தப் பெண்ணின் கணவனுக்கு ஷெல் வீச்சில் அவரது ஒரு காலும், ஒரு கையும் இழந்துபோன நிலையில் அவரும் பின்னா் காணாமல் போயுள்ளாா்.

இங்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் அவல நிலைமை குறித்து இந்த உலகத்துக்கு எதுவுமே தெரியாது.

35 சதுர கிலோ மீற்றா்கள் வரை சுருங்கிப் போயுள்ள ஒரு சிறிய நிலப்பரப்பில், இந்தத் தருணத்தில் இரண்டு லட்சம் மக்கள் இருக்கின்றாா்கள். இந்த இடத்தில் பெரும்பாலானவை கடற்கரையும், காடுகளும் தான் உள்ளன.

போதுமான மருந்தும் கிடையாது என்பதுடன், இவையெல்லாவற்றுக்கும் மேலாக மக்களைச் சுற்றித்தான் கடுமையான சண்டை நடக்கிறது.

வட பகுதியில் இலங்கை அரசால் நடத்தப்படும் முகாமில் தங்கியுள்ள மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கான வாய்ப்பு கிடையாது - என்றாா்.

அதேவேளை, பொதுமக்கள் மோதல் பகுதிகளில் இருந்து வெளியேறுவதை விடுதலைப் புலிகள் தடுக்கின்றனா் - என்றும் குற்றம் சாட்டியுள்ளாா். (அ-சி)

## புதுமாத்தளன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியில் ஈடுபட்டுள்ளனா்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின், புதுக்குடியிருப்பு மற்றும் சாலை தெற்குப் பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன எனவும் கூறப்படுகிறது.

இதில் இருதரப்புகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன என்றும் படைத்தரப்பு தெரிவித்தது. (அ-சி)

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினா் ஆட்லெறி ஷெல், பல்குழல் வெடிகணை, மோட்டாா் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினா்.

இதில் 12 போ் படுகொலை செய்யப்பட்டனா்.

இந்த இழப்புக்கள் இரண்டு கொத்துக் குண்டுகளால் ஏற்பட்டவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையில் அம்பலவன்பொக்கணை மற்றும் மாத்தளன் பகுதிகள் மீது நேற்றுப் பகல் நேரத்தில் படையினா் ஆட்லெறி ஷெல், பல்குழல் வெடிகணை, மோட்டாா் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினா்.அதேவேளையில் படையினரால் தொலைதூர துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இரண்டு தாக்குதல்களிலும் 11 மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனா்.

பச்சைப்புல்மோட்டைப் பகுதியில் நேற்று விமானங்கள் நான்கு தடவைகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதல்கள் காலை 7:40 மணிக்கும் காலை 9:10 மணிக்கும் பின்னா் பிற்பகல் 12:20 மணிக்கும் மீண்டும் பிற்பகல் 3:10 மணிக்கும் விமானப்படையினரால் நடத்தப்பட்டன.

அத் தாக்குதலில் 15 போ் படுகொலை செய்யப்பட்டுள்ளனா்.

விமான மற்றும் ஷெல் தாக்குதல்களில் 90 பேருக்கு அதிகமா னோா் காயமடைந்துள்ளனா்.

மரணமானோரில் பின்வருவோா் அடையாளம் காணப்பட்டதாக இணையத்தளங்கள் தெரிவித்தன.

க.வேலாயுதம் (வயது 60),வை.லலிதா (வயது 24), இ.தினேஸ்குமாா் (வயது 16)

ஜெ.தா்சிகா (வயது 09), சு.நிரோஜினி (வயது 10)இ.பரமேஸ்வரி (வயது 35), ரா.பரசாந்த் (வயது 04), அ.தருமராசா (வயது 67) ,சி.பரபாகரன் (வயது 29), இ.சாந்தரூபன் (வயது 26), அ.வேனுஜன் (வயது 08),வே.ஜெயந்தன் (வயது 24), வி.கிருசாந்தன் (வயது 11),செ.டானியல் (வயது 62),ந.இராசாம்பாள் (வயது 70), சொ.நிரோஜன் (வயது 09),த.சத்தியரூப (வயது 36)சி.கலா (வயது 52)-

செ.பொன்னன் (வயது 52),ம.தாரா (வயது 32),ஆ.ஜெயகொளரி (வயது 29),

த.வஜந்தினி (வயது 22) ,குலமோகன் (வயது 03),வி.பாா்த்தீபன் (வயது 05),மு.சுதாகரன் (வயது 28),வி.செல்வராசா (வயது 48),ம.கஜந்தினி (வயது06), இ.வீரசிங்கம் (வயது 28),ந.சரவண முத்து (வயது 32),ஏ.பாலமணி (வயது 59),சு.முகுந்தன் (வயது 28), சு.அப்பையா( வயது 03),ச.சதீஸ் (வயது 45),அ.தமிழ்நிலவு (வயது 05 மாதம்) ,க.ஈழவேந்தன் (வயது 03 மாதம்), க.திலகேஸ்வரி (வயது 13).

இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. (அ)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road, Kantharmadam, Jaffna
Phone: 0212228093
E-mail: alliancejaffna@yahoo.com
LEARN FRENCH THE FRENCH WAY
பிரெஞ்சு மொழி வகுப்புகள்
பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன!
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
கட்டணம், ஏனைய விவரங்களை நேரில் தொலைபேசியின் ஊடாக பெறலாம்.

BIT
விரிவுரைகள் ஆரம்பம்
Semester 1 பரீட்சைக்குத் தோற்றிய மாணவா்களுக்கான Semester 2 விரிவுரைகள் எதிா்வரும் 21.03.2009 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.
Director
Institute of Informatics Studies (IIS)
[illegible] Block Tower Road Jaffna
T.P. 0212222831

அறிவொளி - NALLUR
சிங்களம் : E.S.பியதாச
(SINH. TRAINED, S.L.T.S-I)
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 21.03.2009
Sat, Sun - 9.00am - Sat, Sun - 5.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியாா் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவா்களது பணிமனையில் 20.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.